வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

12.02.2021 வெள்ளிக்கிழமை







# சட்ட நடவடிக்கை எடுங்கள் நீதிமன்றத்தில் சந்திப்போம்

## வீரசேகரவுக்கு விக்னேஸ்வரன் பதில்



யாழ்ப்பாணம்,பெப்.12

"அமைச்சர் சரத் வீரசேகர என் மீது சட்ட நடவடிக்கையை கட்டாயம் எடுக்கட்டும். அது தொடர்பில் நீதிமன்றத்தில் சந்திப் போம்."

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன்.

சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று யாழில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் ஊடக வியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சரத் வீரசேகர சட்ட நட

02

# பௌத்த நாடுகளின் உதவியுடன் ஜெனிவாவை சமாளிக்க முடிவு!

## பிரதமர் மஹிந்தவுக்கு தேரர்கள் ஆலோசனை



கொழும்பு, பெப்ரவரி 12

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு ஏற்படவுள்ள நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கு பௌத்த நாடுகளின் உதவியை தேரர்களின் ஊடாக நாடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

02

# தமிழ் மக்களை அச்சுறுத்தவே படைகளை ஏவுகின்றது அரசு

## விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.12

எங்கள் மக்களைப் அச்சுறுத்தவேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் தங்கள் படைகளையும், பொலிஸாரையும் ஏவி, பயங்கரவாதச் சட்டம் ஊடான கைதுகளை அரங்கேற்றி வருகிறது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி

02

# நேற்று 940 பேருக்கு கொரோனா தொற்று

## மேலும் நால்வர் மரணம்

கொழும்பு,பெப்.12

நாட்டில் நேற்று மட்டும் 940 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 4 மரணங்களும் பதிவாகியுள்ளன.

நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்

02

# வடக்கில் கொரோனாவால் ஐந்தாவது மரணம் பதிவு!

யாழ்ப்பாணம்,பெப்.12

வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட ஐந்தாவது மரணம் பதிவாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 73 வயது பெண்ணொருவரே கொரோனா பாதிப்பால் உயிரிழந்தார்.

இந்த வயோதிபப் பெண் உயிரிழந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் அங்கு மேற்கொள்ளப்

02

## யாழில் பஸ் நடத்துநர் உட்பட

# 7 பேருக்கு வடக்கில் நேற்று கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம், பெப்.12

வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை - கச்சேரி பஸ்

02

## நான்கு இந்திய மீனவர்கள் மரணம்

# இலங்கையின் விசாரணை முடிவை எதிர்பார்த்திருக்கிறது இந்திய அரசு

டில்லி, பெப்.12

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் நால்வர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் மேற்

02

# தமிழ் பாதுகாப்புப் பிரிவினர் மீது எம்.பிக்களுக்கு நம்பிக்கையில்லை

## சிங்களவர்களை அருகில் வைத்துக்கொண்டு புலிகளுக்காக வேலை செய்கின்றனராம்

கொழும்பு,பெப்.12

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழ் பாதுகாப்புப் பிரிவினர் மீது நம்பிக்கை இல்லை போன்று தனக்குத் தோன்றுகின்றது என ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும்

02

# உடல் அடக்கத்துக்கு அனுமதி பிரிட்டன் தூதுவரும் வரவேற்பு



கொழும்பு,பெப்.12

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளமை தொடர்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹூல்டன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்

02

# ஆளும் கூட்டணிக்குள் குழப்பம்!

## வீரவன்ஸ வீட்டுக்கு படையெடுத்த பிரமுகர்கள்

கொழும்பு, பெப். 12

ஆளுங்கட்சிக்குள் கருத்துமோதல்கள் வலுத்துள்ள நிலையில் நேற்று ஆளுங்கூட்டணியில் அங்கத்துவம் பெறுகின்ற 12 கட்சிகளின் பிரதிநிதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் வீட்டுக்குச் சென்று கலந்துரையாட

02


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## 7 பேருக்கு...

நடத்துநர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 379 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 7 பேருக்கே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வலைப்பாடு மீன்வாடியில் தொழிலில் ஈடுபடும் அவர் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை - கச்சேரி தனியார் பஸ் நடத்துநர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கர்ப்பவதி எனத் தெரிய வருகின்றது.

மற்றையவர் மன்னார் ஆடைத் தொழிற்சாலை பணியாளர். அவர் அறிகுறிகளுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவருடன் பணியாற்றும் ஆடைத் தொழிற்சாலையில் 120 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டன. அதில் ஒருவருக்கு மட்டும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது- என்றார். (அ-எ)

## தமிழ் மக்களை...

யின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சி.வி.விக்னேஸ்வரனை, யாழில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதன்போது விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்-

கிளிநொச்சியிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஆறு மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும், அவர்கள் எந்தக் குற்றங்களையும் செய்யவில்லை எனவும், முக்கியமாக தங்களுடன் வீட்டிலேயே இருந்தவர்களைத்தான் ஏதோ குற்றம்சாட்டிக் கைது செய்துகொண்டு போனதாகவும் அவர்களின் உறவினர்கள் கூறியிருந்தார்கள்.

இது தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவிடம் (ரி.ஐ.டி) நான் பேசியிருந்தேன். அவர்கள் கூறும் விடயங்கள் வித்தியாசமாக இருக்கின்றன. கைதுசெய்யப்பட்டவர்கள் புலிகளோடு சம்பந்தப்பட்டவர்கள் என்றும் புலி இயக்கத்தை மீண்டும் தொடங்குவதற்காக அவர்கள் நடவடிக்கையில் இறங்கியதாகவும் பல குற்றச்சாட்டுகளைக் கூறியிருந்தார்கள்.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், சிலருக்கு கொரோனா தொற்று உள்ளதால் தங்காலைக்கு அனுப்பியுள்ளதாகவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கூறியுள்ளார்கள்.

ஆனால், இவற்றைப் பார்க்கும் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. எங்களுடைய மக்களுக்கு நெருக்கடிகளை, பிரச்னைகளை, தொந்தரவுகளைக் கொடுக்கின்றார்கள்.

எங்கள் மக்களைப் பயமடையச் செய்யவேண்டும் என்பதற்காகவே இவ்வாறான செயல்பாடுகளை அரசாங்கம் தங்கள் படைகளையும், பொலிஸாரையும் ஏவிச் செய்கின்றது என்பது என்னுடைய கருத்தாகும்.

எனவே இதுதொடர்பில் நாங்கள் வழக்குகள் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இருக்கின்றது. எங்கள் கட்சிக்கென தமிழ் மக்கள் சார்பிலே நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுப்பதற்காக சில சட்டத்தரணிகளை ஒன்றுசேர்த்து இருக்கின்றோம். அந்த அடிப்படையில் இந்த உறவினர்களை அவர்களிடம் பாரப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் இப்போது நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறான பல பிரச்னைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் சட்ட ரீதியாக எவ்வாறு அணுகுவது என ஆராய்ந்து வருகின்றோம். வெகுவிரைவில் ஏதாவது ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என எதிர்பார்க்கின்றேன் -என்று குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

## உடல் அடக்கத்...

வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்-

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்றில் மேற்கொண்ட அறிவிப்பை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனாவால் உறவினர்களை இழந்தவர்கள் அவரின் மத சடங்குகளுக்கு அமைவாக மற்றும் சர்வதேச பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடித்து இறுதிச் சடங்கை நடத்த வாய்ப்பளிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த தெரிவித்திருந்தமைக்கு அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஆகியோர் வரவேற்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (அ-எ)

## இலங்கையின்...

கொள்ளப்பட்ட விசாரணைகளின் பெறுபேறுகளை தாம் எதிர்பார்த்திருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய மேல் சபையில் நேற்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் ஜெய்சங்கர்-

இந்த விவகாரம் தொடர்பில் நாம் எமது எதிர்ப்பை மிக மிக கடுமையாக இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கின்றோம். அதற்குப் பதிலாக இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

இலங்கையில் தற்போது இந்திய மீனவர்கள் எவருமே தடுப்புக் காவலில் இல்லை. ஜனவரி 18 ஆம் திகதி இலங்கைக் கடற்படையின் கப்பலால் மோதுண்ட இந்திய மீன்பிடிப் படகிலிருந்த 4 இந்திய மீனவர்களின் மரணம் தொடர்பில் நாம் கடுமையான ஒரு நிலைப்பாட்டையே எடுப்போம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இந்திய தூதுவர் கடுமையான கண்டனத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். டில்லியிலுள்ள இலங்கையின் பதில் தூதுவரும் கடுமையான எதிர்ப்பை இந்தியா தெரியப்படுத்தியிருந்தது.

இலங்கையில் தற்போதைய நிலையில் இந்திய மீனவர்கள் யாரும் தடுப்புக் காவலில் இல்லை என்பதையும் தெரிவித்திருக்கும் அவர், தடுப்புக்காவலில் இருந்த 9 மீனவர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டனர் எனவும் குறிப்பிட்டார். (அ-எ)

# கொரோனா மரணங்கள் மேலும் அதிகரிக்கும்

## வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.12

நாட்டில் தற்போது நிலவிவரும் கொரோனா வைரஸ் தொற்று மரணங்களின் எண்ணிக்கை எதிர்வரும் சில வாரங்களில் மேலும் அதிகரிக்கக் கூடும் என அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடு பூராவும் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அல்லது மரணங்களின் எண்ணிக்கையைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எந்த விதத்திலும் போதுமானதல்ல எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

## தமிழ் பாதுகாப்புப்...

தெரிவித்தவை வருமாறு:

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகளாகவும், பொலிஸ் அதிகாரிகளாகவும் தமிழர்கள் இலங்கையில் கடமையாற்றி வருகின்றனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களை பாதுகாப்புக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொள்வதில்லை.

அத்துடன் சிங்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அருகில் வைத்துக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகவும், புலம்பெயர் தமிழர்களுக்காகவும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேலை செய்து வருகின்றனர்- என்றார். (அ-எ)

## பௌத்த நாடு...

பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் இந்த ஆலோசனையைப் பிரதமருக்கு வழங்கினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள தீர்மானங்கள் குறித்து கலந்துரையாடும் வகையிலான சந்திப்பொன்று மஹாசங்கத்தினருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையே நேற்று முன் தினம் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அபயதிஸ்ஸ தேரர்,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் நோக்கம் நாட்டைப் பிரிப்பதே. மனிதாபிமான முறையின் கீழ் பயங்கரவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதை போர்க்குற்றம் என்று கூறுவது பாரிய குற்றமாகும் என்று குறிப்பிட்டார்.

(இது தொடர்பான விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்)

## நேற்று 940...

கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 73 ஆயிரத்து 114 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் நேற்று மாலை 536 பேருக்கும் இரவு 404 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 73 ஆயிரத்து 114 ஆக அதிகரித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நேற்று இரவு 9 மணிக்குப் பின்னர் வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்று 684 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் 62 ஆயிரத்து 211 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர்.

இதனால் குணமடைந்தவர்களைத் தவிர்த்து 6 ஆயிரத்து 528 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா தொற்றால் மேலும் 4 மரணங்கள் பதிவாகியுள்ளன. இதன் மூலம் கொரோனா தொற்றால் இதுவரை 379 பேர் உயிரிழந்தனர். (அ-எ)

## வடக்கில்...

பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மன்னாரில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு மூன்றாக உயர்ந்துள்ளதுடன் வடக்கில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் தலா ஒருவர் உயிரிழந்தனர். (அ-எ)

## சட்ட நடவடிக்கை...

வடிக்கை எடுத்தால் நான் அதை வரவேற்பேன். இதன்மூலம் பல பிரச்னைகளை வெளியில் கொண்டுவரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எங்களுக்கு ஏற்படும்.

ஏனென்றால் நான் இதுவரை எடுத்திருக்கும் அத்தனை நடவடிக்கைகளும் ஜனநாயகத்துக்கு உட்பட்டவையே. வெறுமனே அவர்கள் நினைத்தது போன்று எங்களைக் குற்றம்சாட்ட முடியாது.

என் மீது சட்ட நடவடிக்கையை கட்டாயம் எடுக்கட்டும். நீதிமன்றத்தில் சந்திப்போம் எனத் தெரிவித்தார். (அ-எ)

## ஆளும்...

லில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

பிரதமருக்கு எதிராக விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து ஆளுங்கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் வீரவன்ஸ மன்னிப்புக் கோரவேண்டும் என்று எதிர்ப்பு கிளம்பியிருந்தது. இருந்த போதிலும் தான் தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்று விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்தார். இந்நிலையிலேயே குறித்த சந்திப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களுக்கு...

எனவே, ஜெனிவா மனித உரிமைப்பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஆரம்ப மாவதற்கு இன்னும் ஒரிரு வாரங்களே இருக்கின்ற நிலையில், ஒரு மாதத்துக்கு முன்னர் வவுனியா குருமண் காட்டில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பாக எட்டப்பட்ட ஒற்றுமையான போக்கையும் புறந்தள்ளி, மீளவும் தமிழ் அரசியல் தரப்பில் ஒரு சாராரை மறு சாரார் விமர்சிக்க ஆரம்பித்திருப்பதை நோக்கும் போது, பிரபல அரசியல் தத்துவஞானி வோல்டயர் (Voltaire) கூறியிருப்பதே வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்குப்பொருத்தவரை மிகப்பொருத்தமானதாக இருக்கின்றது.

வோல்டயர் கூறியது இதுதான்:

'நூற்றுக்கணக்கான எலிகளால் ஆளப்படுவதைவிட, ஒரு நல்ல சிங்கத்தினால் ஆளப்படுவதை மிகவும் விரும்புவேன்.

("I would rather obey a fine lion much stronger than myself than hundreds of rats of my own species").

ஈழநாடு
Eelanadu
12.02.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, தை 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# துறவிகளின் நாடு

விமல் வீரவன்சவை எவராவது எதிர்த்தால் அவர்களுக்கு எதிராக நாம் போராடுவோம். இவ்வாறு ஒரு பௌத்த துறவி ஆளும் பொது ஜன பெரமுன கட்சியை எச்சரித்திருக்கின்றார் - அரசாங்கத்தை எச்சரித்திருக்கின்றார். ஜெனிவாவை கையாளுவது தொடர்பில் நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பௌத்த துறவிகளுடன் கலந்துரையாடியிருக்கின்றார். உங்களின் ஆலோசனைகளின் படிதான் நாம் செயற்படுவோமென்றும் கூறியிருக்கின்றார்.

ஜெனிவா விவகாரம் என்பது அடிப்படையில் நாட்டின் வெளிவிவகார கொள்கை தொடர்பான விடயம். நாட்டின் வெளிவிவகாரங்களை எவ்வாறு கையாளுவதென்று, ஒரு நாட்டின் பிரமதமர் துறவிகளுடன் கலந்துரையாடுவது, உலகிலேயே இலங்கையில் மட்டுமே நடக்க முடியும். அந்தளவிற்கு பௌத்த துறவிகள் இந்த நாட்டில் எல்லையற்ற அதிகாரமுடையவர்களாக இருக்கின்றனர். இந்த அதிகாரம் அவர்களுக்கு எவ்வாறு வந்து சேர்ந்தது?

பௌத்த துறவிகளை பகைத்து எவருமே ஆட்சியதிகாரத்தை பெற முடியாது. ஒருவேளை அதிகாரத்தை பெற்றாலும்கூட, நீண்டகாலத்திற்கு அவர்களை பகைத்துக்கொண்டு அதிகாரத்தில் இருக்க முடியாதென்னும் நிலைமையே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே, இலங்கையின் அனைத்து விடயங்களிலும் பௌத்த துறவிகள் தலையை நுழைக்கின்றனர். பொதுஜன பெரமுனவின் வெற்றியில் பௌத்த துறவிகளுக்கும் பெரிய பங்குண்டு. தற்போது அவர்கள் தங்களின் பங்கை அதிகம் எடுத்துக்கொள்ள முற்படுகின்றனர். இதனால் அனைத்து விடயங்களிலும் அவர்களை அனுசரிக்கவேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கின்றது.

இந்தியா ஒரு பிராந்திய சக்தி. ஆனால், இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, தனது கண்டி விஜயத்தின்போது, பௌத்த துறவிகளின் காலில் விழுந்து வணங்கியிருந்தார். இந்துத்துவமும் பௌத்தமும் வேறுவேறல்ல என்பதை காண்பிக்கும் ஓர் இராஜதந்திர நோக்கில் அவர் இதனை செய்திருக்கலாம். வேண்டுமானால் இதனை மென் சக்தி இராஜதந்திரம் என்றும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம் ஆனால், மோடியின் செயல் அவர்களை அதிகம் கர்வம் கொள்ளவே செய்திருக்கும். ஆனால், இந்திய பிரதமரே, காலில் விழுந்து வணங்கிய பின்னர்கூட, இந்தியாவிற்கு எதிரான விடயங்களில் இப்போதும் பௌத்த துறவிகளே முன்னுக்கு நிற்கின்றனர். இந்திய எதிர்ப்பிற்கு தலைமை தாங்குபவர்களாக அவர்களே இருக்கின்றனர்.

இந்த பின்புலத்தில் இந்து - பௌத்த இணைவின் மூலம் இலங்கை விடயங்களைக் கையாள முடியுமென்னும் இந்திய மென்வலு இராஜதந்திரம் தோல்வியடைந்துவிட்டது. கிழக்கு கொள்கலன் முனைய விவகாரத்தில் இந்து - பௌத்த மென்வலு கைகொடுக்கவில்லை. ஓர் உடன்பாட்டிலிருந்து தன்னிச்சையாக வெளியேறுவது தவறென்று அரசாங்கத்திற்கு எந்தவொரு பௌத்த சங்கமும் ஆலோசனை கூற வில்லை.

இலங்கையின் பெரும்பான்மைவாத அரசியலையும் பௌத்தத்தையும் பிரித்துப்பார்க்க முடியாதளவிற்கு இன்று நிலைமைகள் அதன் உச்சத்தை அடைந்துவிட்டன. பௌத்த துறவிகள் ஒரு சீருடையற்ற படையணியாகவே இருக்கின்றனர். இந்த நாட்டில் பேசப்படும் நல்லிணக்கம், சகவாழ்வு, இனங்களுக்கிடையிலான சமத்துவம் அனைத்தையும் பௌத்த துறவிகள் ஆசீர்வதிக்க வேண்டும். அவர்களின் ஆசீர்வாதமில்லாமல் எதுவும் இந்த நாட்டில் நடக்காது. இதனை புறக்கணித்து செயல்படக்கூடிய ஆளுமை எந்த சிங்களத் தலைவருக்கு இருக்கின்றதோ, அவ்வாறான ஒருவரால் மட்டுமே இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லமுடியும். ஆனால், அவ்வாறானதொரு தலைவரை இதுவரையில் இந்த நாடு காணவில்லை.

துறவிகளின் பிடிக்குள் கட்டுண்டு கிடக்கும் நாட்டில் எவ்வாறு புதியதோர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முடியும்? எவ்வாறு முன்நோக்கி பயணிக்க முடியும்?

# தமிழ் மக்களுக்கு சகல தரப்பினரும் துரோகமிழைத்ததே உண்மை!

- அலசுவது **இராஜதந்திரி** -



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாவதற்கு இன்னும் ஓரிரு வாரங்களே இருக்கின்றன. இந்நிலையில், அண்மையில் நடந்து முடிந்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணி சர்வதேச சமூகத்துக்கு இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்கள் மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்கு வந்துள்ள போதிலும் தொடர்ந்து தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றவும், மனிதாபிமானப் பிரச்னைகளை தீர்க்கவும் போராடிவருவதையே எடுத்தியம்புவதாக விளங்கியிருந்தது.

இருந்தபோதிலும், ‘வெண்ணை திரண்டு வரும் போது தாழியை உடைப்பது’ போன்ற விஷமத்தனங்களே பொத்துவிலில் இருந்து வந்த பேரணி பொலிகண்டியை நெருங்கிய போது இடம்பெற்றிருந்தன.

பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையிலான பேரணி இலங்கையின் ஆட்சியாளர்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், இந்தியாவுக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பூர்வீக பிரதேசங்கள் என்ற செய்தியை வரையறை செய்துள்ளதை ஒரு பரந்த கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டுமே தவிர, ‘கோழி முதலில் வந்திருந்ததா? அல்லது முட்டை முதலில் வந்திருந்ததா?’ என்ற வகையில் ‘விதண்டா வாதத்தை’ மேற்கொள்வது வெற்றிகரமாக நடந்து முடிந்த பேரணியை கொச்சைப்படுத்துவதாகவே அமையும்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணியை முன்னின்று வெற்றிகரமாக நடத்தி முடிப்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வழங்கிய பங்களிப்பு அபரிமிதமானது.

**மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை**

இந்தியாவின் சுதந்திர போராட்டத்தின் போது மகாத்மா காந்தி பல யாத்திரைகளை கால் நடையாகவும், ரயில் வண்டிகள் மூலமாகவும் இந்தியாவில் மேற்கொண்டிருந்தார்.

மகாத்மா காந்தி மேற்கோண்ட பிரிட்டிஷாருக்கு எதிரான யாத்திரைகளில் அஹமதாபாத்திலுள்ள அவரது சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து 240 மைல்கள் தூரம் கால் நடையாக தண்டி என்றழைக்கப்படுகின்ற(Dandi) இந்தியாவின் மேற்கிலுள்ள அராபிய கடற்கரையை நோக்கி பிரிட்டிஷார் விதித்த உப்பு வரிக்கு எதிராக தண்டி யாத்திரையை நடத்தியிருந்தார். இப்பாதயாத்திரை உப்பு சத்தியாக் கிரக யாத்திரை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப் பாதயாத்திரையே உலகில் சுதந்திர போராட்டத்துக்காக நடத்தப்பட்ட மிக நீண்ட யாத்திரையாக கணிக்கப்பட்டிருந்தது. 1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி தொடங்கி அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிவரை மகாத்மா காந்தியின் உப்பு சத்தியாக்கிரக தண்டி யாத்திரை 91 வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டிருந் தது.

ஆனால், கால் நடையாகவும் , வாகனப் பேரணியாகவும் இந்தியாவின் தண்டி யாத்திரக்குப்பின்னர், 250 கிலோ மீற்றர் தூரத்தை இலங்கையின் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணி சாத்வீகமான முறையில் அடைந்திருந்தது.

**ஏமாற்றங்களை தழுவும் தமிழ் மக்கள்**

எனவே, வடக்கு-கிழக்கில் ஒரு சாத்வீக போராட்டம் எழுச்சி பெற ஆரம்பித்துள்ளது எனப்பெருமைப்படுவதை விட, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பொத்துவில் முதல் பொலிகண்டிவரை நடத்தப்பட்ட பேரணி குறித்து தெரிவித்தவற் றின் மூலம், தமிழ் மக்களுக்கு எம். ஏ. சுமந்திரன் துரோகமிழைத்துவிட்டார் என்று குறிப்பிட்டிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பாட்டனாரான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் காலத்திலிருந்து இன்று வரை தமிழ் அரசியலில் மிதவாதிகள் மத்தியில் மட்டுமல்ல, ஆயுதப்போராட்டத்தை மேற்கொண்ட தீவரவாதிகள் மத்தியில்கூட இவர்களின் ஒற்றுமையான - ஒருமித்த போக்கு ஒருபோதும் காணப்பட்டிருக்கவில்லை.


இதன்காரணமாக, தமிழ் மிதவாத அரசியல் வாதிகளாலும், தீவிரவாத ஆயுதப் போராளிகளின் தவறான அரசியல் அணுகு முறைகளாலும் அழிவுகளையும், அவலங்களையும் அனுபவித்து, இறுதியில் ஏமாற்றங்களையும் சந்தித்தவர்களாகவே வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் காணப்படுகின்றனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# தேசிய சக்திகளை பிளவுபடுத்த சர்வதேச உளவு பிரிவுகள் சதி!

## எல்லே குணவன்ஸ தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு,பெப்.12

**சர்வதேச உளவுப்பிரிவுகள் நாட்டுக்குள் செயல்படுகின்றன என்றும், தேசிய சக்திகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்தார்.**

இது தொடர்பில்அவர்மேலும் கூறியவை வருமாறு:

தேசிய சக்திகள் இணைந்துதான் இந்த அரசை ஆட்சிக்கு கொண்டுவந்தன. எனவே, மக்கள், அரசு மற்றும் தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்காக மேற்படி சக்திகள் தொடர்ந்தும் செயல்படும். எனவே, தேசிய அமைப்புகளுக்குள்ளும் பல பிரச்சினைகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

அதேபோல் அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் சூழ்ச்சி நடக்கின்றது. எனவே, விழிப்புடன் இருந்து மதிநுட்பத்துடன் அனைவரும் செயற்படவேண்டும்.

சர்வதேச உளவு அமைப்புகள் நாட்டுக்குள் தீவிரமாக செயற்படுகின்றன. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர், தேசிய வளங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே இவை செயற்படுகின்றன.

இதேவேளை, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். எரிகின்ற நெருப்பில் எண்ணைய் ஊற்றாமல், நாட்டுக்காக இணைந்து செயற்பட முன்வர வேண்டும். கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

மஹிந்தவை முன்னிலைப்படுத்தி பிரச்னைகளை உருவாக்குவதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றது. நாட்டு மக்கள் மஹிந்தவை நேசிக்கின்றனர். அவருக்கு துளியளவுகூட பிரச்னை ஏற்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். பிரச்னைகளை உருவாக்குவதற்கு மஹிந்தவை பயன்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

# இலங்கையில் ஆரம்பிக்கப்படும் இரண்டாவது சூரியசக்தி பூங்கா

கொழும்பு, பெப். 12

இலங்கையில் எரிசக்தி செயன்முறையை முன்னெடுத்துச் செல்லும் போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மையமாகக்கொண்டு, நாட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள இரண்டாவது சூரியசக்தி பூங்கா திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் மேம்பாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க இதனைத் தெரிவித்தார்.

சியம்பலாண்டுவ பகுதியில் இந்தப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

2022 டிசெம்பர் மாதத்தில் இந்த எரிசக்தி பூங்கா மூலம், தேசிய மின் சாரக்கட்டமைப்பு மூலம்100 மெகாவோட் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க கூறினார்.




# தேவையற்ற விதத்தில் நாட்டுக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தும் அரசு

## சபையில் நேற்று ஹக்கீம் விசனம்



கொழும்பு, பெப். 12

அரசாங்கம் தேவையற்ற விதத்தில், நாட்டுக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் பிரதமரினால் வெளியிடப்பட்ட கருத்து எப்போது வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரகுமான் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் வழங்கிய ஆரம்ப சுகாதாரம், தொற்று நோய்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே, சுகாதார அமைச்சு என்ற விதத்தில் தமக்கு தனிப்பட்ட ரீதியில் தீர்மானங்களை எட்ட முடியாது எனவும், சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் ஊடாகவே தீர்மானங்கள் எட்டப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதையடுத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சபையில் குறுக்கிட்டு கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பிரதமர் தீர்மானமொன்றை எட்டி, சபையில் அறிவித்ததன் பின்னர், அதனை மாற்றியமைப்பது சரியானதாக இருக்க முடியுமா என அவர் கேள்வி எழுப்பினார். சுகாதார அமைச்சில் யார் இதனை முடக்குவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார். அத்துடன், அரசாங்கம் தேவையற்ற விதத்தில், நாட்டுக்குள் அமைதியின்மையை ஏற்படுத்தி வருவதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இந்த பிரச்னையை பெரிதாக்க வேண்டாம் எனவும், இது தற்போது ஜெனீவா வரை சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் 600 ஊழியர்களுக்கு உடன் இடமாற்றம்

கொழும்பு, பெப். 12

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஊழியர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு மாற்றப்படுவர் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரட்ணசிறி தெரிவித்துள்ளார்.

அவர்களை இடமாற்றும் பணி ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றும் அவர் கூறினார்.

ஊழல்கள் தொடர்பில் பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அதன் நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

குற்றச்சாட்டுகளுக்குப் பின் அதன் ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் உட்பட 600 ஊழல் அதிகாரிகளை பிற அரசாங்க நிறுவனங்களுக்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கையில் பரவும் வைரஸ் மிகவும் பயங்கரமானது அல்ல!

## நுண்ணுயிரியல் பேராசிரியர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 12

இலங்கையில் பரவும் கொரோனா வைரஸ் வகையானது ஏனைய நாடுகளை விடப் பாரதூரமானது அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் நுண்ணுயிரியல் பேராசிரியர் நீலிகா மலவிகே இதனைத் தெரிவித்தார்.



ஏனைய நாடுகளில்கொரோனா வைரஸ் பரவும் வேகம் மற்றும் தாக்கத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பரவும் வைரஸின் நிலை மோசமானது அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

# குருந்தூரில் மீட்கப்பட்ட சிதைவுகள் அநுராதபுரம் காலத்துக்கு உரியவை

## தொல்பொருள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 12

**முல்லைத்தீவு - தண்ணீறூற்று குருந்தூர் மலையில் மீட்கப்பட்ட தொல்பொருள் சிதைவுகள், அநுராதபுர காலத்திற்குரியவை என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.**



அந்தப் பகுதியில் லிங்கத்தை ஒத்த சின்னங்கள் உள்ளிட்ட சில தொல்பொருட்கள் அடையாளம் காணப்பட்டன.

குருந்தூர் மலையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போதே இவை மீட்கப்பட்டதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க குறிப்பிட்டார்.

அந்த சிதைவுகள் அநுராதபுரம் காலத்திற்குரியவை என்றும் அங்கு பௌத்த தூபி காணப்பட்டமைக்கான சான்றுகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைக்கு அமைய, கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி குருந்தூர் மலையில் அகழ்வாராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அகழ்வுப் பணிகள் இம்மாத இறுதியில் நிறைவு செய்யப்படும் என தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)



# வவுனியா நகரசபை முன்பாக மனித சங்கிலிப் போராட்டம்!

வவுனியா, பெப். 12

வவுனியா நகரசபை வாயிலில் மனிதச்சங்கிலிப் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஊழியர்கள் சிலர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நகரசபை நிர்வாகத்துக்கு எதிராக கடந்த சில நாட்களாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா நகரசபையின் பொது நூலகத்தில் பணியாற்றி வந்த புதிய அரச பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் க. கோல்டன் மற்றும் ஏனைய சில ஊழியர்களே தங்களுக்கு நகரசபை நிர்வாகம் அநீதி இழைத்துள்ளதாகத் தெரிவித்து சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் பொங்குதமிழ் தூபி நேற்றுமுன்தினம் நகரசபையால் முட்கம்கொண்டு அடைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த ஊழியர்களின் போராட்டத் துக்கு ஆதரவு தெரிவித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களால் மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

# சம்பிக்கவுக்கு பிரதித்தலைவர் பதவி? ஐக்கிய மக்கள் சக்திக்குள் எதிர்ப்பு!

கொழும்பு, பெப். 12

சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் உயர் பதவியொன்றை வழங்குவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜாதிக ஹெல உறுமய ஊடாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துவந்த சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதற்காக ஹெல உறுமயவிலிருந்து விலகினார். பொதுச்செயலாளர்



பதவியையும் துறந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மத்திய செயற்குழுவில் பங்கேற்றிருந்தாலும் அக்கட்சியின் உறுப்புரிமையை சம்பிக்க ரணவக்க இன்னும் பெறவில்லை. அவருக்கு வழங்கப்படவுள்ள பதவி தொடர்பான அறிவிப்பு உறுதியாக வெளியான பின்னரே இணைவார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சம்பிக்கவுக்கு பிரதித் தலைவர் பதவியை வழங்குவது தொடர்பில் சஜித் அணி பரீசிலித்துவருகின்றது. இதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதனால் தற்போது இழுபறி நிலை தொடர்கின்றது.

இதேவேளை, சம்பிக்க ரணவக்கவால் '43' என்ற அரசியல் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் சஜித் தரப்பை கிலிகொள்ள வைத்துள்ளது.

# 400 சுற்றுலா பயணிகள் நேற்று இலங்கை வந்தனர்

கொழும்பு, பெப். 12

உக்ரைன் மற்றும் கஜகஸ்தானிலிருந்து 400 க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட இரண்டு விமானங்களில் நேற்று நாட்டை வந்தடைந்தன.

இந்த இரண்டு விமானங்களும் மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கின.

கஜகஸ்தானிலிருந்து 235 சுற்றுலாப் பயணிகளுடனான விமானமும் 179 சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட விமானம் உக்ரைனில் இருந்தும் வருகை தந்துள்ளன.

உக்ரைனிலிருந்து இலங்கைக்கு வரும் எட்டாவது சுற்றுலாப் பயணிகள் குழு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜெனிவா தொடரை எவ்வாறு எதிர்கொள்வது? மகா சங்கத்தினருடன் பிரதமர் ஆலோசனை!

கொழும்பு, பெப். 12

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள தீர்மானங்கள் குறித்து கலந்துரையாடும் வகையிலான சந்திப்பொன்று மகா சங்கத்தினருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையே நேற்று முன் தினம் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானங்கள் அடங்கிய அறிக்கை மற்றும் அது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மதிப்புமிக்க மகா சங்கத்தினரின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இச்சந்திப்பு நடைபெற்றது.

கொவிட்-19 தொற்று நிலைமையை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய உலக நாடுகளுக்கிடையே இலங்கை முன்னணியில் காணப்படும் நிலையில், எமது நாட்டை இழிவுபடுத்தும் நோக்கில் மிகவும் தவறான கருத்துக்களை உள்ளடக்கி மிக மோசடியான முறையில் இந்த மனித உரிமைகள் திணைக்கள அறிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் வெற்றிக்கும், இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலான 16 விடயங்களை உள்ளடக்கி ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.



இது தொடர்பில் கருத்து தெரிவித்த வண.பேராசிரியர் மெத கொட அபயதிஸ்ஸ தேரர், இதுபோன்ற தீர்மானமிக்கதொரு தருணத்தில் மரியாதைக்குரிய மகாசங்கத்தினரின் ஆலோசனை மற்றும் அனுசாசனத்தை பெறுவதற்கு தீர்மானித்தமை குறித்து நான் முதலில் பிரதமர் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற சூழ்நிலையில் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எதிரான தீர்மானமொன்றை சமர்ப்பிப்பது பொருத்தமற்றது என்றும், அதற்கு பதிலாக எமது தரப்பு நீதியை எடுத்துரைக்கும் பிரதிவாத அறிக்கையொன்றை மாத்திரம் முன்வைக்க வேண்டும் என தேரர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நோக்கம் நாட்டை பிரிப்பதே என சுட்டிக்காட்டிய பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், மனிதாபிமான முறையின் கீழ் பயங்கரவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவது போர்க்குற்றம் என்று கூறுவது பாரிய குற்றமாகும் எனத் தெரிவித்தார்.

இத்தீர்மானத்திற்கு அமைவான நல்லிணக்கம் மிகவும் ஆபத்தானது என்றும், அத்தகைய உடன்பாடு இல்லாமல் பாராளுமன்றத்தில் தேசப்பற்று சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நேரம் ஒதுக்குவது பொருத்தமானது என்றும் அவர்கள் கூறினர்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த வண. பெங்க முவே நாலக தேரர், மனிதாபிமான செயற்பாட்டின் மூலம் பெற்ற சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் பின்பற்றிய வெளியுறவுக் கொள்கைகளை கவனத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

குறித்த கலந்துரையாடலின் போது, வணக்கத்திற்குரிய திவியாகத யசஸ்ஸி தேரர், வண. பலாங்கொட சோபித தேரர், வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர், வண.பேராசிரியர் கொள்ளுப்பிடியே மஹிந்த சங்கரக்கித தேரர், வண. பேராசிரியர் இத்தா தெமளியே இந்தசார தேரர் ஆகியோர் பங்கேற்றனர். (அ)



## திடீரென பாராளுமன்றுக்கு விஜயம் செய்தார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்துக்கு சென்று சபை அமர்வில் பங்கேற்றார்.

பாராளுமன்ற அமர்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய நிலையில், சபை நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை வரையான 4 நாட்களுக்கு இடம்பெறவுள்ளன.

சபை அமர்வுகள் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின. இந்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் நேற்றைய சபை அமர்வுகளில் கலந்துகொண்டார்.



## கோழி இறைச்சி ஏற்றிச்சென்ற கூலர் வாகனம் புரண்டு விபத்து

வவுனியா, பெப். 12

வவுனியா, புளியங்குளம் பகுதியில் நேற்று காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கூலர் ரக வாகனம் வீதியைக் கடக்க முற்பட்ட மாட்டுடன் மோத முயன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சி ஏற்றி வந்த கூலர் வாகனம் புளியங்குளம் சந்திக்கு அருகில் தடம் புரண்டது. இதனால் வாகனத்தில் பயணித்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 118 தடுப்பூசி மையங்கள் வடக்கில் அமைக்கப்படும்

### மருத்துவர் கேதீஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.12

**வடக்கு மாகாணத்தில் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்காக 118 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அவர்களில் 85 சதவீமான உத்தியோகத்தர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் மக்களுக்கு தடுப்பூசிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடி மேற்கொண்டுள்ளோம்.

30 தொடக்கம் 60 வரையானோருக்கு தடுப்பூசி முதற்கட்டமாக வழங்கப்படும். அவர்கள் குறித்த பெயர் விவரங்கள் பிரதேச செயலர்கள் ஊடாக சேகரிக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி போடுவதற்கு மக்களை பிரதேச செயலக ஊழியர்களே ஒழுங்குபடுத்தி அழைத்து வருவர். வடக்கில் தடுப்பூசி போடுவதற்காக 118 நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்ற உடனடியாகவே மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் தொடங்கிவிடும்-என்றார்.

## காய்ச்சல் அறிகுறி இருந்தால் உடனே சிகிச்சை பெறுங்கள்

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, பெப். 12

காய்ச்சல் அறிகுறிகளால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி காய்ச்சல், இருமல், சளி, மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகளை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும் என சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கொவிட் நோயாளிகளைக் கண்டறிவது தொடர்பாக சுகாதார பரிசோதக அதிகாரிகள் பிரச்னைகளை எதிர்கொண்டு வருவதால், பொது மக்கள் ஏதேனும் உடல்நலப் பிரச்னையால் அவதிப்பட்டால் மருத்துவ சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தினார்.



## ஜனாஸா நல்லடக்க விவகாரம்; அரசுக்குள் மாறி மாறி குழப்பம்

கொழும்பு, பெப். 12

கொரோனா தொற்று நோயால் உயிரிழப்போரின் உடல்களை அடக்கம் செய்வது குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவே இறுதி முடிவை எடுக்கும் என தொற்று நோய் மற்றும் கொவிட் தொற்று கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடலைத் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உறுதிமொழி வழங்கிய நிலையில் நேற்று அதே பாராளுமன்றத்தில் பிரதமரின் பிரசன்னத்துக்கு மத்தியில் இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே இவ்வாறு கருத்து வெளியிட்ட நிலையில் உடனடியாகவே அதனை நிராகரித்த பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நிபுணர் குழு ஏமாற்று எனத் தெரிவித்தார்.

அத்துடன், இதே பாராளுமன்றத்தில் பிரதமர் வழங்கிய உறுதிமொழிக்கு என்ன நடந்தது எனவும் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, கொரோனாவால் உயிரிழந்தவர்களை அடக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் உறுதியளித்த பின்னர் கூட சுகாதார அதிகாரிகள் இது குறித்து எந்த விழிப்புணர்வும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர் என விசனம் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சியில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்

முல்லைத்தீவு, பெப். 12

யுத்தத்தினால் கிளிநொச்சி மாவட்டம் பாதிக்கப்பட்டமையால் பிறப்பு சான்றிதழ்களைப் பதிவு செய்வதில் தாமதங்கள் ஏற்படுவதற்கு காரணமாகவும் அமைகின்றது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிறப்பு சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அதனை வழங்குவதற்கான நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் அனுசரணையில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களில் பிறப்பு சான்றிதழ் இல்லாதவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதி பதிவாளர் நாயகம், கிராமசேவையாளர்கள், பதிவாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

150 மேற்பட்ட பயனாளிகள் குறித்த நடமாடும் சேவை ஊடாக பயன்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பிறப்பு சான்றிதழ் என்பது எமது பிறப்பை உறுதிப்படுத்தும் ஓர் விடயமாகும். அதனை பெற்றுக்கொள்வதில் பெற்றோர் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர். அவர்களுக்கான போதுமான விழிப்புணர்வு இல்லாத நிலையே இதுவாகும்.

வைத்தியசாலையில் பிறப்பு பதிவு செய்யப்படுகின்றபோதிலும் அதன் பிரதியை பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பது தொடர்பில் பலர் அக்கறை கொள்வதில்லை. வைத்தியசாலையில் வழங்கப்படும் சான்றிதழை பயன்படுத்தி பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துவிட்டு தாம் பிறப்பு சான்றிதழை பெற்றுக் கொண்டதாகக் கருதுகின்றனர்.

உண்மையில் குறித்த சான்றிதழ் பிரதேச செயலகங்களில் உள்ள பதிவாளர் நாயகத்தின் அலுவலகங்கள் ஊடாக பதிவு செய்வதற்காக அனுப்பி வைக்கப்படவேண்டும். அவ்வாறு செயற்படாமையால் பல குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். மாவட்ட செயலகங்களில் இடம்பெறும் கூட்டங்களில் இவ்வாறான நிலை தொடர்பில் எனது கவனத்திற்கு உத்தியோகத்



தர்களால் கொண்டு வரப்படுகிறது. இந்த விடயத்தில் பெற்றோர் அவதானமாக செயற்படாதவிடத்து பிள்ளைகள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட பல்வேறு தேவைகளிற்கு பிறப்பு சான்றிதழானது இன்றியமையாத ஒன்றாகும். கிளிநொச்சி மாவட்டம் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பதாலும் இவவாறு பிறப்பு சான்றிதழை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன-என்றார்.



## பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

முல்லைத்தீவு, பெப். 12

கல்வி மேம்பாட்டு நடவடிக்கையின் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டம் இந்துபுரம், கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்துபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வை பீனிக்ஸ் இளைஞர் கழக தலைவர் லக்சீதரன், செயலாளர் ம .தங்கரூபன் மற்றும் பிரதான நிதி அனுசரணையாளர் எவ்.பீ.எம் குழு கனடா நிறுவனம் மற்றும் திருமதி முத்துலட்சுமி, பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# இம்மாத இறுதிக்குள் 16 இலட்சம் தடுப்பூசி

### உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு வழங்குகிறது




கொழும்பு, பெப். 12

**இலங்கைக்கு இம்மாத இறுதிக்குள் 16 இலட்சம் அஸ்ட்ரா ஜெனெக்கா தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. உலக சுகாதார அமைச்சின் கோவக்ஸ் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.**

இலங்கை மக்கள் தொகையில் 20 சதவீதத்தினருக்கு 16 இலட்சம் தடுப்பூசிகளை இலவசமாக வழங்குவதற்கு உலக சுகாதார அமைப்பு பங்களிப்பு செய்துள்ளது.

முதலாவது கட்டத்தின் கீழ் வழங்கப்படும் 16 இலட்சம் தடுப்பூசிகளுக்கு பின்னர் ஏனையவற்றையும் பெற்றுக்கொடுப்பதற்கு கோவக்ஸ் நிறுவனம் உடன்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகத்தின் தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் விசேட பிரதிநிதி விசேட மருத்துவர் பாலித அபயகோன் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்குமாறு கோரிக்கை

கொழும்பு, பெப். 12

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான ஆவணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களில், வைத்தியசாலைகளில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் மருத்துபீட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

4,800 மருத்துவ பீட மாணவர்கள் வைத்தியசாலைகளில் பயிற்சிகள் பெற்று வருகின்றனர்.



## புற்றுக்குள் ஒளித்திருந்த பாம்புகள் படையெடுப்பு

### முஸ்லிம் எம்.பிக்கள் குறித்து அஷாத் சாலி கடும் சீற்றம்

கொழும்பு, பெப். 12

ஜனாஸா நல்லடக்கத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்ற பிரதமர் மஹிந்தவின் அறிவிப்பை அடுத்து, 20 இற்கு ஆதரவளித்த எதிரணி முஸ்லிம் எம்.பிக்கள், இப்போது துள்ளிக் குதிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலி தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஒரேயொரு சொல்லை பிடித்துக்கொண்டு, அதற்கு கை, கால், முகம் வைத்து, உருவம் அமைத்து, அறிக்கை விட்டு, தம்பட்டம் அடிக்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ள அவர், 20 இற்கு கை உயர்த்திய இந்த சமூகத் துரோகிகள் இவ்வளவு காலமும் 'மழை காலத்தில் புற்றுக்குள் ஒளித்த பாம்பு' போல் இருந்துவிட்டு, இன்று தொடக்கம் படமெடுத்து ஆடத் தொடங்குகிறார்கள் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் மேடைகளில் ராஜபக்ஷக்களை மோசமாக விமர்சித்து, மக்கள் மத்தியில் வாக்குகளைச் சூறையாடி வெற்றி பெற்றார்கள். பின்னர் சமூகத்தின் மீது எந்த அக்கறையும் இல்லாமல், அவர்களின் தலைமைகளுக்கும் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டிவிட்டு, கையை உயர்த்தினார்கள்.

தமது சொந்த நலன்களுக்காகவும் பட்ட கடன்களை அடைப்பதற்காகவுமே, இவர்கள் பெரமுன அரசுக்கு ஆதரவளித்து, கோட்டாபயவை சர்வ வல்லமை பொருந்தியவராக மாற்றினார்கள். இவர்கள் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்த கேவலம் கெட்டவர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் எம்.பியாவதற்கு முன்னரேயே, 'வென்ற பின்னர் அரசுக்கு ஆதரவளிப்போம்' என்று பகிரங்கமாக சொன்னவர். கட்சியின் கொள்கைக்கு மாறாக இவர் கருத்து தெரிவித்தவர்.

புத்தளத்தில் 'மரத்தில் ஒரு காலையும், மயிலில் மற்றொரு காலையும் வைத்துக்கொண்டு" பொதுச் சின்னத்தின் மூலம் மந்திரிப் பதவிக்கு வந்த அலி சப்ரி எம்.பி, அடாத்தாகப் பிடித்து பறிபோகவிருந்த தனது கள்ளக் காணிகளை காப்பாற்றுவதற்காக, தனது கட்சித் தலைமைக்கும் மாறுபாடு செய்து 20 இற்கு ஆதரவளித்தார். ஏனைய எம்.பிக்கள் அனைவரும் டீலர்கள்.

எனவே, சமூகத்துக்கு இவர்கள் எதையாவது செய்ய வேண்டுமென்று உளமார விரும்பினால், அறிக்கைகள் விடுவதை அவசரமாக நிறுத்த வேண்டும் - என்றார்.

(அ)

## ரூ.80 லட்சம் பெறுமதியான போதைப்பொருட்கள் மீட்பு



கொழும்பு, பெப். 12

சுமார் 80 லட்சம் ரூபா பெறுமதியான குஷ் ரக போதைப்பொருட்கள் அடங்கிய பொதி சீதுவையில் உள்ள சுங்க பொருள் விடுவிப்புப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

குளிர்பானம் தயாரிக்கும் இயந்திரத்துடன் மிகச் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சுங்க தரப்பினரால் அந்த போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன.

அந்த இயந்திரத்தை பலகைப்பெட்டி ஒன்றில் வைத்து, குறித்த போதைப்பொருட்கள் கொழும்பிலுள்ள போலியான முகவரி ஒன்றுக்கு அனுப்பப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அந்தப் பொதியைப் பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்னிலையாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேகம் அடைந்த சுங்க அதிகாரிகள் அந்தப் பொதியை பரிசோதித்துள்ளனர். இதன்போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குஷ் ரக போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன. இதனை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சதொச களஞ்சியங்களை சோதனையிட நடவடிக்கை

கொழும்பு, பெப். 12

கொரோனா தொற்று பரவல் நிலை காரணமாக நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் 27 அத்தியாவசியப் பொருட்களுக்கு நிலையான விலை நிர்ணயிக்கப்பட்டதோடு குறித்த சதொச களஞ்சியசாலைகளைச் சோதனையிடும் நடவடிக்கை அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெலிசறை, பூஸா, குருநாகல், வெயாங்கொடை மற்றும் இரத்மலானை உட்பட அநேக பகுதிகளில் அமைந்துள்ள சதொச களஞ்சியசாலைகள் இவ்வாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நேற்று முன்தினம் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

## தொற்றாளர் எண்ணிக்கை நாளுக்குநாள் உயர்கின்றது

### வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 12

கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரிக்கின்றமையானது, கொவிட் பரவல் மிகவும் அபாய நிலையில் உள்ளதை வெளிப்படுத்துவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர் சமந்த ஆனந்த இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் நோயாளர்கள் எண்ணிக்கை 500 முதல் 600 அளவில் பதிவான நிலையில், தற்போது அது 900 ஆக அதிகரித்துள்ளது.

இது மிகவும் கவனத்தில் எடுத்து, விஞ்ஞான ரீதியாக ஆய்வுசெய்யப்படவேண்டிய காரணமாகும்.

அத்துடன், கொழும்புக்கு வெளி மாவட்டங்களின் அபாய நிலை தொடர்பில், ஆய்வுகளை மேற்கொண்டு பொதுமக்களை தெளிவுபடுத்தவேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும் - என்றார்.



# 3 தீவுகளில் சீன காற்றாலை: இந்தியாவுக்கு ஆபத்தானதா?

- பார்த்தீபன் -

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தமக்குக் கிடைக்கும் என இறுதிக் கணம் வரையில் எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைந்த இந்தியாவுக்கு, கடந்த வாரத்தில் மற்றொரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது இலங்கை அரசு. யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை சீன நிறுவனமொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்க வழங்கவுள்ளது என்பதுதான் அந்த அதிர்ச்சித் தகவல்.

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து சில மைல் தொலைவில்தான் இந்தத் தீவுகள் இருக்கின்றன. யாழ். தீவுகளில் சீனா கால் பதிப்பது இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு சவாலான ஒன்று என்பது உண்மை. இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட முறையிலேயே இதனைச் செய்வதாக இந்தியா கருதுகின்றது எனத் தமிழ்த் தரப்புக்கள் சொல்கின்றன.

இவ்விவகாரம் தொடர்பில் இரண்டு விதமான கருத்துக்கள் உள்ளன. ‘மூன்று தீவுகளில் காற்றாலை அமைக்கவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதே தவிர மூன்று தீவுகளையும்சீனாவுக்கு வழங்கப்படவில்லை. காற்றாலை அமைப்பதால் அத் தீவில் வாழும் தமிழ் மக்களுக்கு என்ன தீமை என்று பார்த்து எதிர்க்க வேண்டுமேயொழிய சீனாக் கம்பனிக்கு கொடுக்கப்பட்டமைக்காக எதிர்க்கக்கூடாது’ என்ற ஒரு கருத்து சிலரால் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், காற்றாலை அமைப்பது என்ற பெயரில் கால் வைக்கும் சீனா அதனை மட்டும் செய்துவிட்டுப் போய்விடுமா என்ற கேள்வியும் மற்றொரு தரப்பினரால் எழுப்பப்படுகின்றது. ஏதோ ஒரு வகையில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தமது செல்வாக்கிற்குள் கொண்டுவரும் திட்டத்துக்கு இதனை சீனா பயன்படுததிக்கொள்ளும் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். அதனால், இவ்விடயத்தை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான்.

**இந்தியாவின் பிரச்சினை**

கிழக்கு முனைய விவகாரத்தைப் பொறுத்தவரையில் அதில் மூன்று நாடுகள் சம்பந்தப்பட்டிருந்தன. இலங்கை, இந்தியா, ஜப்பான் என்பனவே அவை. இந்த மூன்று நாடுகளும் கைச்சாத்திட்டிருப்பதால், அது ஒரு சர்வதேச உடன்படிக்கை. இதனைத் தான் மீறப்போவதில்லை என இறுதி வரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ தெரிவித்து வந்தார். அதனை இந்தியாவும் நம்பியது. இறுதியில் அவர் கைகளை விரித்துவிட்டார்.

துறைமுக ஊழியர்களின் போராட்டத்தின் முன்பாக தன்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்பது இதனை நியாயப்படுத்துவதற்காக இலங்கை அரச தரப்பு சொல்லிக் கொண்ட காரணம். இந்த சமாதானம் இந்தியாவைச் சாந்தப்படுத்தாது என்பதே உண்மை.

இதில் இந்தியா அதிர்சசியடைவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது - பொருளாதார ரீதியாகவும், கேந்திர ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு துறைமுகத்தை தம்மால் பெற்றுக்கொள்ள முயாமல் போய்விட்டது என்பது. இரண்டாவது, - இலங்கையின் உள்நாட்டு அரசியலில் செல்வாக்கைச் செலுத்தக் கூடிய ஒரு சக்தியாக சீனா வளர்ச்சியடைந்து வருகின்றது என்பது. இந்தியாவைக் குழப்பும் விவகாரம் அதுதான். தொழிற்சங்கப் போராட்டங்களின் பின்னணியில் சீனா இருந்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் இந்தியாவுக்கு எழுவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன. கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தும் கிழக்கு முனையத்தைக் கைப்பற்ற முடியாமல் போனமை இந்திய இராஜதந்திரத்துக்கு ஒரு படுதோல்வியாகத்தான் பார்க்கப்படுகின்றது.

**மூன்று தீவுகள்**

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்தின் நயினாதீவு, அனலை தீவு உட்பட 3 தீவுகளில் காற்றாலை மின் சக்தி திட்டமொன்றை மேற்கொள்வதற்கு சீன அரசிற்கு சொந்தமான ஒரு நிறுவனத்துடன் உன்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியிருக்கின்றது. மேற்படி தீவுகள் தமிழ்நாடு இராமேஸ்வரத்திற்கு அருகில் அமைந்திருக்கின்றன என்பதால், இது இந்தியாவுக்கு ஆபத்தானது என்ற கருத்து வெளியிடப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு முதல் தீவுப் பகுதிகளில் காற்றாலை அமைத்து அதன்மூலம் மின்சாரம் பெறுவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது. சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் இது தொடர்பாக தமிழ்நாட்டில் தூத்துகுடிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலைகளை சென்று பார்வையிடவும் திட்டம் இருந்தது. இத் திட்டத்திற்கு இந்தியாவிடமே முதலில் உதவி கோரப்பட்டது. இந்தியா உதவி செய்யாத நிலையிலேயே இந்தியாவுக்கு தெரிந்தே சீனா கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற கருத்து ஒன்றும் உள்ளது.

பொருளாதார இராஜதந்திரம் என்னும் அடிப்படையிலேயே இவ்வாறான விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சீனாவுடன் இலங்கை நெருங்கிச் செல்வதும் அந்த அடிப்படையில்தான். ஆனால் இந்தியாவுடனான திட்டங்களின் போது, பொருளாதார இராஜதந்திரம் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுகின்றது என்பதுதான் புதுடில்லியின் கவலை.

ஜெனீவாவில் இலங்கை எதிர்கொள்ளப்போகும் நெருக்கடியைக் காட்டித்தான் தனக்குத் தேவையானவைகளைப் பெற்றுக்கொள்ள இந்தியா வியூகம் வகுத்திருந்தது. ஜெனீவாவில் இம்முறை நெருக்கடி தீவிரமாக இருக்கும் என்பதைத் தெரிந்திருந்தும், இந்தியாவின் பக்கம் சாய்வதற்குத் தாம் தயாராகவில்லை என்பதைத்தான் கொழும்பு உணர்திக் கொண்டிருக்கின்றது.

> **கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியா அதிர்சசியடைவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது - பொருளாதார ரீதியாகவும், கேந்திர ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு துறைமுகத்தை தம்மால் பெற்றுக் கொள்ள முயாமல் போய்விட்டது என்பது. இரண்டாவது, - இலங்கையின் உள் நாட்டு அரசியலில் செல்வாக்கைச் செலுத்தக் கூடிய ஒரு சக்தியாக சீனா வளர்ச்சி யடைந்து வருகின்றது என்பது.**

**ஜெனீவா விவகாரம்**

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான எந்த ஒரு தீர்மானத்தையும் கொண்டுவந்து நிறைவேற்ற உறுப்பு நாடுகளாக உள்ள 47 நாடுகளில் 24 நாடுகளின் ஆதரவு தேவை. இந்தியா மறைமுக அச்சுறுத்தல்களை விடுத்தாலும், நேரடியாக களத்தில் இறங்காது என கொழும்பு நம்புகின்றது. இலங்கையில் இந்தியாவின் நலன்கள் அதிகளவுக்கு இருப்பது இதற்கு ஒரு காரணம். இந்திய அழுத்தங்கள் அதிகரித்தால், இலங்கை மேலும் அதிகளவுக்கு சீனாவின் பக்கம் சென்றுவிடும் என்ற அச்சம் இரண்டாவது காரணம்.




இந்தியாவின் தரப்பிலுள்ள பலவீனங்கள் கொழும்புக்குத் தெரியும். அதன் அடிப்படையில்தான் கொழும்பின் காய் நகர்த்தல்கள் உள்ளன. இந்தியாவை உசுப்பேத்திவிடுவதற்கு தமிழ்க் கட்சிகள் முயன்றாலும், இந்தியாவின் நகர்வுகள் நிதானமாகவே இருக்கும். கொழும்பைப் பகைக்காமல், எதனையாவது சாதிக்க நினைத்து மேலும் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்வது இந்தியாவுக்கு ‘வழமைபோல’ தவிர்க்க முடியாததாகவே இருக்கலாம்.

**விக்கியின் எச்சரிக்கை**

வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் இது தொடர்பில் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் முக்கியமானவை. இவர் சொல்லியிருப்பது இதுதான்:

‘யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை இலங்கை அரசாங்கம் சீன நிறுவனமொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்க வழங்க இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது மிகவும் பாரதூரமான ஒரு விடயம். இனியாவது இலங்கைத் தீவில் நிரந்தர நம்பிக்கைக்குரிய தரப்பாக இந்தியா தமிழ் மக்களைக் கருதி அவர்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் அவர்களின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை மையப்படுத்தி தனது கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

இந்தியாவின் தென்கோடி பாதுகாப் பாக இருக்கவேண்டுமானால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் உச்சளவு அதி காரப் பகிர்வுடன் ஆட்சி செய்யவேண்டும். இதனை உறுதிப்படுத்தும்வகையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசி யல் தீர்வு ஒன்றினை தமிழ் மக்களே தெரிவு செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தி னால் வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கையை இந்தியா தலைமை ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

கிழக்கு முனை விடயத்தில் நடந்ததே நாளை 13ஆவது அரசியல் திருத்த விட யத்திலும் நடக்கும். ஒற்றை ஆட்சியின் கீழான எந்தத் தீர்வுக்கும் இந்த நிலை மையே ஏற்படும் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்’ என்ற விக்கினேஸ்வரனின் கருத்து முக்கியமானதுதான். ஆனால், இதற்காக இந்தியா என்ன செய்யப்போகின்றது?

# தி.மு.க. கூட்டணியில் குழப்பம்?

## அச்சத்தில் தோழமைக் கட்சிகள்

ஆ.விஜயானந்த்
பி.பி.சி தமிழுக்காக



தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளிடம் தி.மு.க தலைமை இன்னும் பேச்சு தொடங்கவில்லை. 'தொகுதிப் பங்கீடு, தனிச் சின்னம் ஆகியவை தொடர்பாக வெளியாகும் தகவல்களால் குழப்பமே மிஞ்சுகிறது' என அச்சப்படுகின்றன தி.மு.க அணியில் உள்ள கட்சிகள்.

'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற பெயரில் தி.மு.க. தலைமையும் 'வெற்றி நடைபோடும் தமிழகம்' என்ற பெயரில் அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும் முதல்வருமான எடப்பாடி பழனிசாமியும் பிரசாரப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதுதவிர, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தியின் கொங்கு மண்டலப் பயணம், சசிகலா வருகை என தமிழகத் தேர்தல் களம் விறுவிறுப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

**30 அமைச்சர்களின் தொகுதிகள்**

அதேநேரம், தமிழக சட்டமன்றத்தில் கடந்த 10 ஆண்டுகளாக தி.மு.க ஆட்சிக் கட்டிலில் இல்லாததால், இந்தத் தேர்தலை மிக முக்கியமானதாக தி.மு.க தலைமை கருதுகிறது. இதன் காரணமாக, ஹ2016 தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் இரட்டை இலைச் சின்னத்தில் அ.தி.மு.க போட்டியிட்டதைப் போல, இந்தமுறை அதிகப்படியான இடங்களில் உதயசூரியன் போட்டியிட வேண்டும்' என தி.மு.க தலைமை கருதுவதாகவும் கூறப்பட்டது.

குறிப்பாக, '30 அமைச்சர்களின் தொகுதிகளையும் கூட்டணிக் கட்சிகளுக்குத் தாரை வார்க்காமல் தி.மு.கவே போட்டியிட வேண்டும்' என்பதிலும் தி.மு.க தலைமை உறுதியாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மேலும், சிறிய கட்சிகளை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வைக்கும் சூழலும் ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது.

**ஐபேக் கணித்த 148 தொகுதிகள்**

அதிலும், 'தி.மு.கவுக்கு தேர்தல் வியூகங்களை வகுத்துக் கொடுக்கும் ஐபேக் நிறுவனம், 148 தொகுதிகளை வெற்றி வாய்ப்பு அதிகமுள்ள தொகுதிகளாகக் கண்டறிந்துள்ளது. இதில் பல தொகுதிகளை கூட்டணிக் கட்சிகள் கோரலாம்' என்கின்றனர் பெயர் குறிப்பிட விரும்பாத தி.மு.க நிர்வாகிகள் சிலர்.

இது குறித்து மேலும் நம்மிடம் விவரித்தவர்கள், "பழநி தொகுதியை சி.பி.எம் கட்சி எதிர்பார்க்கிறது. அங்கு தி.மு.க. மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தொகுதியைத் தயார்நிலையில் வைத்திருக்கிறார். திண்டுக்கல் தொகுதியில் சி.பி.எம் கட்சி பலமுறை வென்றுள்ளது. கடந்த 2016 தேர்தலில் மக்கள் நலக் கூட்டணி சார்பில் சி.பி.எம் வேட்பாளராக திண்டுக்கல்லில் போட்டியிட்ட கல்யாணசுந்தரம், இந்த முறையும் சீற்றை எதிர்பார்க்கிறார். திண்டுக்கல்லில் சொந்தக் கட்சிக்குள் போட்டி அதிகம் இருப்பதால் சி.பி.எம் கட்சியினர் பழனியை எதிர்பார்க்கிறார்கள். இது ஒரு உதாரணம்தான். எனவே, தி.மு.கவுக்கு வெற்றிவாய்ப்புள்ள தொகுதிகளைக் கூட்டணிக் கட்சிகளுக்குக் கொடுப்பதில் தி.மு.க தலைமை ஆர்வம் காட்டவில்லை" என்கின்றனர்.

**என்ன நடக்கிறது?**

தி.மு.க கூட்டணியில் பிரதானக் கட்சியாக காங்கிரஸ் உள்ளது. கடந்த 2016 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் 41 தொகுதிகளைப் பெற்ற காங்கிரஸ் கட்சி, 8 தொகுதிகளில் மட்டுமே வென்றது. இதில், காங்கிரஸ் கட்சி போட்டியிட்ட பல தொகுதிகளில் அ.தி.மு.கவே வென்றது.

மிகவும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிய தி.மு.க, 89 தொகுதிகளில் மட்டுமே வென்றது. இந்த முறையும் 41 இடங்களைக் காங்கிரஸ் கோரியுள்ளது. இதற்கு தி.மு.க தலைமை சம்மதிக்க வாய்ப்பில்லை எனவும் கூறப்படுகிறது. ராகுல் காந்தியின் வருகை உள்ளிட்ட காரணங்களால் கூடுதல் இடங்கள் ஒதுக்கப்பட லாம் என தமிழ்நாடு காங்கிரஸ் குழு நம்பிக் கொண்டிருக்கிறது.

"தி.மு.க, காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக உள்ளது. இடப்பங்கீடு தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் உண்மையில்லை. ராகுல்காந்திக்கும் ஸ்டாலினுக்கும் நல்ல புரிதல் இருக்கிறது" என்கிறார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவர் கோபண்ணா. தொடர்ந்து பேசிய அவர், ஹஹவரப் போவது சட்டமன்றத் தேர்தல்தான் என்றாலும் ராகுல்காந்தி மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அவரது பயணம் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல, கூட்டணிக் கட்சிகளுக்கும் பயன் தரும் வகையில் உள்ளது.

**ராகுலின் தென் மாவட்ட பயணம்**

அடுத்ததாக தென்மாவட்டங்களில் ராகுல் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். அந்தப் பயணம் கொங்கு மண்டலத்தை விடவும் எழுச்சியாக இருக்கும். அது மிகப் பெரிய வெற்றியைக் கொடுக்கும். இதனைத் தொடர்ந்து ஸ்டாலினுடன் இணைந்து ராகுல் பிரசாரம் செய்ய உள்ளார். தமிழ்நாட்டில் எங்கள் கூட்டணி கட்டுக்கோப்பாக இருக்கிறது. சசிகலா வருகையால் அ.தி.மு.கவுக்கு ஏற்படப் போகும் பாதிப்புகள், எங்கள் அணிக்கு மேலும் வலு சேர்க்கும்" என்கிறார்.

அதேநேரம், சட்டமன்ற தேர்தலில் இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் அதிக இடங்களில் போட்டியிட விரும்புகின்றன. கடந்த 2016 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நலக் கூட்டணியாக இடதுசாரிகள் களமிறங்கியதால், தி.மு.கவின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக, ஹஒற்றை இலக்கத்தில் இரு கட்சிகளுக்கும் இடங்கள் ஒதுக்கப்படலாம்' எனத் தி.மு.க தரப்பில் கூறப்படுகிறது. அண்மையில் சி.பி.எம் கட்சியின் மாநில குழுவின் முடிவில், 'எங்களுடைய செல்வாக்குக்கு ஏற்ற வகையிலான தொகுதிகளில் போட்டியிடுவோம்' எனத் தெரிவித்திருந்தனர்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எத்தனை தொகுதிகளில் போட்டி?**

இதன் தொடர்ச்சியாக சி.பி.எம் கட்சியின் தேசிய தலைவர்கள் பிரகாஷ் காரத், சீதாராம் யெச்சூரி, பிருந்தா காரத் உள்ளிட்டோர் 12 பிரசார மையங்களுக்குச் செல்ல உள்ளனர். இதன் காரணமாக, '12 தொகுதிகளில் சி.பி.எம் போட்டியிடலாம்' என்ற தகவல் வெளியானது. இதுவும் குழப்பங்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

"தொகுதிப் பங்கீடு, எண்ணிக்கை ஆகியவை குறித்து தி.மு.க தரப்பில் எதுவும் பேசப்படாததால் சில அச்சங்கள் உள்ளன. ஏனென்றால் இடப்பங்கீடு தொடர்பாக ஊடகங்களில் ஏராளமான தகவல்கள் வெளிவருகின்றன. இதனால் கூட்டணி குலைந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது" என்கிறார் சி.பி.எம் கட்சியின் முக்கிய நிர்வாகி ஒருவர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கூட்டணிக் கட்சிகளின் செல்வாக்குக்கு ஏற்ற இடங்கள் கிடைக்குமா என்ற அச்சம் காங்கிரஸ், சி.பி.ஐ, சி.பி.எம், ம.தி.மு.க, வி.சி.க ஆகிய கட்சிகளுக்கும் ஏற்பட்டுவிட்டன. அதனை சரிசெய்வதற்கு தி.மு.க தரப்பில் இருந்து எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதேநேரம், 'கூட்டணி உறுதியாக இருக்கிறது' எனத் தி.மு.க தலைவர் பேசியிருக்கிறார். தேர்தல் திகதி அறிவித்த பிறகு தொகுதிப் பங்கீடு சுமூகமாக முடியும் என நம்புகிறோம்" என்றார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "எங்கள் கட்சி போட்டியிடக் கூடிய 18 தொகுதிகளை அடையாளம் கண்டு வைத்துள்ளோம். தி.மு.க தரப்பில் எவ்வளவு இடங்களை ஒதுக்குவார்கள் எனத் தெரியவில்லை. எங்கள் தொகுதிகளுக்கும் சி.பி.ஐ கட்சிகளின் தொகுதிகளுக்கும் இடையில் எந்த விதக் குழப்பங்களும் இல்லை. நாங்கள் ஏற்கெனவே வென்ற தொகுதிகளைத்தான் கேட்க உள்ளோம். நாகர்கோவில், திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல், நாகப்பட்டினம், திருப்பூர், கோவை, அரூர், கிருஷ்ணகிரி எனப் பரவலாகத் தொகுதிகளை கேட்போம். தி.மு.க தலைமை பேச்சுவார்த்தை நடத்தும்போது நிலவரம் தெரியவரும்" என்கிறார்.

**உரிய மரியாதை கிடைக்குமா?**

இந்த விவகாரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய நிர்வாகி ஒருவர், பெயர் குறிப்பிட விரும்பாமல் பிபிசி தமிழிடம் பேசியபோது, "தி.மு.க அணியில் யாரும் அதிகப்படியான இடங்களைக் கேட்டுவிடக் கூடாது என்பதற் காகவே சில தகவல்கள் வெளியாகின்றன. 180 இடங்களில் தி.மு.க நிற்க வேண்டும் எனவும் காங்கிரஸ் கட்சிக்கு 40 தொகுதிகளைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் தி.மு.க தலைமை நினைப்பதாகவும் செய்திகள் கசிந்தன" என்கிறார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "ஒவ்வொரு கட்சிக் கும் தனித்தனியாக செல்வாக்கும் கௌரவமும் இருக்கின்றன. இவையெல்லாம் இணைந்துதான் கூட்டணி உருவாகிறது. 2006 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு சிறுபான்மை அரசாகத்தான் தி.மு.க இருந்தது. அப்போது வெளியில் இருந்து ஆதரவு கொடுத்தனர். எனவே, கூட்டணி கட்சிகளுக்கு என்று எதுவுமே இல்லை என யாரும் முடிவு செய்ய முடியாது. களத்தில் போராடுகின்ற கட்சிகளுக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட வேண்டும். இடதுசாரிக் கட்சிகளுக்கு இரட்டை இலக்கத்தில் கொடுப்பதுதான் சரியானதாக இருக்கும். இதே பாணியில், பாராளுமன்றத் தேர்தலின்போதும் இடதுசாரிக் கட்சிகளுக்குத் தலா ஒரு சீட்டுதான் எனத் தகவல் பரப்பினர். பின்னர், பேச்சில் 2 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இந்தமுறை இரட்டை இலக்கத்தில் இடங்களை எதிர்பார்க்கிறோம்" என்றார்.

'தி.மு.க அணியில் என்ன நடக்கிறது?' என சி.பி.எம் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் ஆறுமுக நயினாரிடம் கேட்டபோது, "எங்கள் கூட்டணி மிகுந்த கட்டுக்கோப்புடனும் உறுதியுடனும் இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவையும் பா.ஜ.கவையும் வீழ்த்த உறுதியுடன் பாடுபடுவோம். இதில் சில ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும் அதையும் சந்தித்து இந்த அணி 234 தொகுதி களிலும் உறுதியாக வெற்றி பெறும். கடந்த காலங்களில் இரட்டை இலக்கங்களில் எதிர்க்கட்சிகள் வென்றன. இந்த முறை அதற்கும் வாய்ப்பு இருக்காது. அனைத்து தொகுதி களிலும் தி.மு.க அணியே வெற்றி பெறும்" என்றார்.

சி.பி.ஐ கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் லெனின், பேசுகையில், "இந்தக் கூட்டணி வலிமையானது. மக்களைப் பற்றிக் கவலைப்படக் கூடியவர்கள் இந்த அணியில் இருக்கிறார்கள். மேலும் சிலர் இந்த அணிக்குள் வரலாம். தேர்தல் தேதி அறிவித்த பிறகு தொகுதிப் பங்கீடு சுமூகமாக முடியும் என நம்புகிறோம்" என்றார்.

**ம.தி.மு.க, வி.சி.க. கணக்கு என்ன?**

இடதுசாரிகளின் நிலை இவ்வாறாக இருந்தாலும், 'கூட்டணியில் 10 இடங்கள் உறுதியாக கிடைக்கும்' என ம.தி.மு.க நம்புகிறது. இந்தத் தேர்தலில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவின் மகன் துரை வையாபுரியும் களமிறங்கலாம் எனவும் கூறப்படுகிறது. அண்மையில் தி.மு.க தலைவரிடம் பேசிய வைகோவும், ஹநீங்கள் என்ன முடிவெடுத்தாலும் சரி' எனக் கூறியதாக சொல்லப்படுகிறது. இது குறித்து பேசிய ம.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, "தேர்தல் திகதி அறிவித்த பிறகு தொகுதிப் பங்கீடு தொடர்பான வேலைகள் தொடங்கும். இது தொடர்பாக தி.மு.கவில் குழு அமைத்த பிறகு ஒவ்வொரு கட்சிகளும் பேசுவார்கள். எத்தனை தொகுதிகளை ம.தி.மு.க எதிர்பார்க்கிறது என்பதை எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் முடிவு செய்வார்" என்கிறார்.

இதுதவிர, விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும் ஒற்றை இலக்கத்தில் இடங்கள் ஒதுக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் விழுப்புரம் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு ரவிக்குமார் வென்றார். அதே பாணியில் உதயசூரியன் சின்னத்தில் வி.சி.க வேட்பாளர்கள் போட்டியிடலாம் என்ற தகவலும் வெளியானது. இதற்குப் பதில் அளித்த வி.சி.க தலைவர் திருமாவளவன், 'எங்களின் தனித்தன்மை பாதிக்காத வகையில் முடிவெடுப்போம், தனிச்சின்னத்தில் போட்டியிடுவது உறுதி" என்றார். இதுகுறித்து பேசிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, ஹஹஎங்கள் கூட்டணி வலிமையாக உள்ளது. எத்தனை இடங்கள் என்பதை தி.மு.க தலைமையிடம் பேசி எங்கள் தலைவர் முடிவு செய்வார்" என்கிறார்.

**தி.மு.க தலைமை முடிவெடுக்கும்**

கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே உள்ள குழப்பங்கள் குறித்து தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியிடம் கேட்டபோது,ஹஹ தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தி.மு.க தலைவர் குழு அமைப்பார். அந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று இடங்களை ஒதுக்குவார். கூட்டணிக்குள் எந்தவிதக் குழப்பங்களும் இல்லை" என்றார்.

மார்ச் முதல் வாரத்தில் தி.மு.க தரப்போடு கூட்டணிக் கட்சிகள் பூர்வாங்க பேச்சுகளை நடத்தலாம் என கூறப்படுகிறது. அதற்குள் எந்தவிதக் குளறுபடிகளும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அச்சம், கூட்டணி கட்சிகள் மத்தியில் நிலவுகிறது.

ஈழநாடு



# ஆளும் கூட்டணியை பலவீனப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது

## விமலுக்கு ஆதரவாக வாசுதேவ களத்தில்

கொழும்பு,பெப்.12

**அமைச்சர் விமல் வீரவன்ச சாதாரணமாக கூறிய விடயத்தை சிலர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும் கூட்டணிக்குள் முரண்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர். இவ் விடயம் தொடர்பில் பிரதமருடன் பேசத் தீர்மானித்துள்ளோம். கூட்டணியைப் பலவீனப்படுத்த ஒரு போதும் இடமளிக்க முடியாது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் பொதுவானது. ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவுக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒரு உயரிய பதவி வழங்கப்பட வேண்டும் என்று கூறிய கருத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ச சாதாரணமாக கூறிய விடயத்தை ஒரு தரப்பினர் பெரிதுபடுத்தி கூட்டணிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிக்க முன்னின்று செயல்பட்டவர்களை விமர்சிப்பதற்கு இடமளிக்க முடியாது. இவ்விடயம் தொடர்பில் பிரதமருடன் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளோம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் பல கட்சிகள், சிவில் அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றனர். அனைவரது கருத்துக்கும் யோசனைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். கூட்டணி என்ற நிலையில் மாறுபட்ட பல கருத்துக்கள் காணப்படலாம். ஆகவே கூட்டணியை பலவீனப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது- என்றார்.

(எ)



# சுகாதார விதிமுறைகளை மீறிய 3,085 பேர் கைது

கொழும்பு,பெப்.12

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் கொரோனா சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத்தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 3,085 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (எ)

# சர்வதேச அரங்கில் ஒருபோதும் உள்நாட்டு பிரச்னைக்கு தீர்வில்லை

## அமைச்சர் சந்திரசேன திட்டவட்டம்



கொழும்பு,பெப்.12

சர்வதேச அரங்கில் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் பல இம்முறை அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயல்படும்.

இருப்பினும் உள்ளகப் பிரச்னைக்கு சர்வதேச அரங்கில் ஒருபோதும்தீர்வைப்பெற்றுக்கொள்ள முடியாது என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

இதுவரையில் குற்றச்சாட்டுக்கள் எவையும் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் இலங்கை விவகாரத்தில் ஒருதலைபட்சமாகவே செயற்படுகிறார். இது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அடிப்படை கொள்கைக்கு முரணானது.

இறுதிக்கட்டயுத்தத்தில் மனித உரிமை மீறள்கள் இடம்பெறவில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இதுவரைகவனம்செலுத்தவில்லை.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு மாத்திரம் கவனம் அதிக அக்கறை காட்டப்படுகிறது. இது பொருத்தமற்றதாகும்.

சர்வதேச அரங்கில் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் தமிழ்தேசிய தரப்பினர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களை ஒன்றிணைத்து போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறான செயல்பாடுகளால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது. இம்முறை இலங்கைக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையின் பலம் கொண்ட நாடுகள் செயல்படும்.

பொதுஜன பெரமுன பல கட்சிகளை உள்ளடக்கி கூட்டணியமைத்துள்ளது. கூட்டணி என்ற ரீதியில்கருத்து முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் காணப்படும்.

இது இயல்பானதொன்றாகும். அமைச்சர் விமல் வீரவன்ச கூறிய கருத்துக்கள் தற்போது பல வகையில் பேசப்படுகிறது. காணப்படும் பிரச்னைக்கு தீர்வு காண கூட்டணிக்குள் பேச்சுக்களில் ஈடுபடுவது சிறந்ததாகும்.

ஜனாதிபதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தை எக்காரணிகளாலும் பலவீனப்படுத்த முடியாது. பலகருத்து வேறுபாடுகள் காணப்படலாம். ஆனால் அரசாங்கம் என்ற ரீதியில் இணைந்து செயல்படுவோம்.

சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் முரண்பாடற்ற அரசாங்கமாக செயல்படுவது கட்டாயமாகும்- என்றார். (எ)

# கூட்டு ஒப்பந்தம் அகற்றப்படக்கூடாது

## இராதாகிருஷ்ணன் உறுதி



கொழும்பு,பெப்.12

அரசாங்கத்தின் முறையற்ற வெளிநாட்டு கொள்கைகளினால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளுடன் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

மறுபுறம் ஜெனிவா அமர்வுகளின் நிறைவில் இலங்கை மீது எவ்வாறான தடைகள் விதிக்கப்படும் என்று மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்வேலு சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாட்டில் பல முக்கிய பதவிகளில் இராணுவ அதிகாரிகளே காணப்படுகிறார்கள். எனவே எதிர்காலத்தில் இலங்கையிலும் மியன்மாரில் ஏற்பட்டதைப் போன்ற நிலைமை ஏற்படும் என்ற சந்தேகம்எழுந்துள்ளதாகவும்இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதைய அரசாங்கத்தின் முறையற்ற வெளிநாட்டுக் கொள்கைகளால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளுடன் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

மறுபுறம் ஜெனிவா அமர்வுகளின் நிறைவில் இலங்கை மீது எவ்வாறான தடைகள் விதிக்கப்படும் என்று மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்தியாவுடனான நட்புறவை பகைத்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

கிழக்கு முனைய விவகாரங்களில் இந்தியாவிடம் சுமுகமான பேச்சுக்களின்மூலம்தீர்மானத்தை அறிவித்திருக்கலாம். மாறாக திடீரென இவ்வாறு அறிவித்தமையே இந்தியாவுடன் முரண்படக் காரணமாகும்.

இந்தியாவிடமிருந்து எமக்கு பல உதவிகள்கிடைக்கின்றன. இலங்கைக்கு முதன் முதலாக தடுப்பூசிகளைவழங்கியதும்இந்தியாவாகும்.

அதற்காக இந்தியாவுக்கு கிழக்கு முனையத்தை வழங்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. பேச்சுக்களின் மூலம் சுமுகமான தீர்வு எட்டப்பட்டிருக்க வேண்டும்என்பதே எமது நிலைப்பாடாகும்.

தற்போது நாட்டில் பல முக்கிய பதவிகளில் இராணுவ அதிகாரிகளே காணப்படுகிறார்கள். எனவே எதிர்காலத்தில் இலங்கையிலும் மியன்மாரில் ஏற்பட்டதைப் போன்ற நிலைமை ஏற்படும் என்ற அச்சம் உருவாகியுள்ளது- என்றார். இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

அரசாங்கம் அல்லது முதலாளிமார்சம்மேளனம் தோட்டத்தொழிலாளர்களுக்கு 25 நாட்கள் சம்பளம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சம்பளத்தை அதிகரித்து வேலை நாட்களை குறைப்பது அல்லது அவர்களுக்கு அழுத்தம் பிரயோகிப்பது பொறுத்தமற்றது.

அத்தோடு தொழிலாளர்களின் நலன் சார்ந்த விடயங்களில் முக்கிய பங்கு வகிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் எந்த சந்தர்ப்பத்திலும் அகற்றப்பட்டு விடக்கூடாது.

அதில் கூறப்பட்டுள்ள தொழிலாளர் நலன்சார் விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் முன்னின்று செயற்பட வேண்டும்.

வேலை நாட்கள் குறைப்படமாட்டாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறுகின்ற போதிலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பினடிப்படையில்வேலைநாட்களைகுறைத்தால் தொழிலாளர்கள் பாதிப்படைவார்கள்- என்றார். (எ)

# விரைவில் வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுக

## முஜிபுர் ரஹ்மான் சவால்



கொழும்பு,பெப்.12

கொரோனா தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை விரைவில் வெளியிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 10 மாதங்களாக நாட்டில் இடம்பெற்றுவந்த பெரும் பிரச்னைதான் கொரோனாவால் மரணிப்பவர்களை எரிப்பதற்கு மாத்திரம் அனுமதித்திருந்தது.

என்றாலும் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்குவதாக பிரதமர் இந்த சபையில் அறிவித்திருந்தார். அதற்காக பிரதமருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அதேபோன்று இந்த விடயத்தை வர்த்தமானியில் வெளியிட்டால் தான் அது சட்டமாக்கப்படும்.

அதனால் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்யலாம் என்ற வர்த்தமானி அறிவிப்பையும் விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதமரை கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)



### மயிலத்தமடு - மாதவனை:

## மேய்ச்சல் தரை அபகரிப்பு மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.12

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு - மாதவனை பகுதியில் மேய்ச்சல் தரை அபகரிப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறிய அபகரிப்பு தொடர்பான வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே எதிர்வரும் 26ஆம் திகதி வரை வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதிவாதிகள் சார்பில் ஒருவர் மாத்திரமே நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த நிலையிலேயே, வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், தவராசா கலையரசன் ஆகியோரும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர். (எ)

## இலங்கை தொடர்ந்து இந்தியாவுடன் பேச்சு

### சபையில் ரோஹித தகவல்

கொழும்பு,பெப்.12

நல்லாட்சி அரசாங்கம் இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுடன் செய்து கொண்ட கொழும்பு துறைமுக கிழக்கு முனைய ஒப்பந்தத்தை எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் கிழித்தெறிய முடியாது. அரசாங்கம் தொடர்ந்தும் இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்துகின்றது என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன சபையில் கூறினார்.



பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில்: கொழும்பு துறைமுக கிழக்கு முனைய உடன்படிக்கை தொடர்பான தற்போதைய நிலைப்பாடு என்ன? இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றதா? என ஹேஷா விதானகே எம்.பி. கேள்வி எழுப்பிய வேளையில் அதற்குப் பதிலளித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நல்லாட்சி அரசாங்கம் இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுடன் செய்துகொண்ட கொழுப்பு துறைமுக கிழக்கு முனைய ஒப்பந்தத்தை எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் கிழித்தெறிய முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுடன் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது.

இதுதொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இதன்போது இந்தியா பெயர் குறிப்பிட்டுள்ள குறித்த நிறுவனத்துடன் பேச்சுக்களை முன்னெடுத்து தீர்வொன்றை எட்டும் குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சரவைப் பத்திரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் துறைமுக அபிவிருத்தியில் முதலீட்டாளர்களுடன் முன்னெடுத்த பேச்சுக்களில் இலங்கைக்கு அதிகம் சாதகமான வகையிலேயே பேச்சுக்களை முன்னெடுத்தோம். ஆனால் நாம் முன்வைத்த யோசனைகளுக்கு அந்த நிறுவனம் இணக்கம் தெரிவிக்கவில்லை.

அதனால்தான் கிழக்கு முனையத்துக்கு முதலீட்டாளர்களை கொண்டுவரும் திட்டத்திலிருந்து நாம் விலகிக்கொண்டோம். எவ்வாறு இருப்பினும் கிழக்கு முனையத்தின் நூறு வீத நிர்வாகத்தையும் துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதாக அரசாங்கம் தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

இருப்பினும் கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தை சர்வதேச முதலீட்டாளர்களுடன் இணைந்து அபிவிருத்தி செய்யவே நாம் முயற்சிக்கின்றோம்- என்றார். (எ)

# காதலர் தினத்தை முன்னிட்டு இணையவழியில் பண மோசடி

### இளைஞர் - யுவதிகளுக்கு அஜித் ரோஹண எச்சரிக்கை



கொழும்பு,பெப்.12

**காதலர் தினத்தை முன்னிட்டு இணையவழி மோசடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதனால் இளைஞர் மற்றும் யுவதிகள் இது தொடர்பில் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

காதலர் தினத்தை முன்னிட்டு இணையவழி ஊடான மோசடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இளைஞர் - யுவதிகளை இலக்குவைத்து, காதலர் தின பரிசு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்காக சிறிய தொகை பணத்தை வைப்பிலிடுமாறு கூறி மோசடிக்காரர்கள் குறுந்தகவல்களை அனுப்பி இத்தகைய மோசடிகளை செய்யலாம். இதன்போது இணையத்தினூடாக பணக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் இளைஞர் - யுவதிகளும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். மோசடிக்காரர்கள் இணையவழி கணக்குகளுக்கு அத்துமீறி நுழைந்து பணத்தை மோசடி செய்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

அத்தோடு தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாக நடத்தப்படும் விருந்துபசாரங்கள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்பவர்கள் மட்டுமன்றி அதில் கலந்துகொள்பவர்கள் அனைவருக்கும் எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்- என்றார். (எ)

## ரஞ்சனின் எம்.பி. பதவி குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டாம்

### பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு,பெப்.12

ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வது தொடர்பில் மார்ச் 16 ஆம் திகதி வரை எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்துச் செய்யப்படுவதை இடைநிறுத்துமாறு கோரி ரஞ்சன் ராமநாயக்கவால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணைகள் கடந்த 5ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜூன ஒபசேகர மற்றும் நீதிபதி மாயாதுன்னே கொரோயா ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வது தொடர்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என உத்தரவிடப்பட்டது.

அத்துடன் இந்த மனு 11 ஆம் திகதி அதாவது நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையில் இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

### ஊழியருக்கு கொரோனா தற்காலிகமாக மூடப்பட்டது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு,பெப்.12

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த செயலகத்தில் பணியாற்றிவரும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# தமிழ்நாட்டில் 3இல் ஒருவர் வைரஸ் தொற்றுக்கு இலக்கு

சென்னை, பெப். 12

**தமிழ்நாட்டில் மூன்றில் ஒருவர் கொரோனா தொற்று வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. அங்கு 2.26 கோடி பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.**

இந்திய அரசாங்கத்தின் பணிப்பின்பேரில் தமிழ்நாடு அரசால் கொரோனா கட்டுப்படுத்தும் ஆய்வு இடம்பெற்றது.

இரு கட்டங்களாக இடம் பெற்ற இந்த ஆய்வு நான்கு பிரிவுகளாக இடம்பெற்றது. இதில் 31.6 சதவீதம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு அவர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த 2020 நவம்பர் வரை 8 இலட்சம் பேர் தொற்றுக்கு இலக்காகினர் என்று கூறப்படுகின்றது. ஆனால், கொரோனா கட்டுப்படுத்தும் ஆய்வின்படி இந்தக் காலப் பகுதியில் 2.26 கோடி பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இது சுகாதாரத் துறையால் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்ட எண்ணிக் கையிலும் சுமார் 30 மடங்கு அதிகம். மேலும், மக்கள் தொகையில் 3 இல் ஒருவருக்கு தொற்று இருந்ததை காட்டுகிறது என்று தெரியவந்துள்ளது.(ஐ)





டுபாயில் ரோபோக்களால் நடத்தப்படும் தேநீர் விடுதியை காண பொதுமக்கள் குவிந்து வருகின்றனர். ரோபோ கபே எனப்படும் இந்த விடுதியில் முழுவதும் ரோபோக்களே பானங்களை தயார் செய்து வழங்குகின்றன. தொடுதிரை மூலம் வாடிக்கையாளர் தரும் கட்டளைகளை அச்சு பிசுங்காமல் ரோபோக்கள் செய்கின்றனவாம்.

## இந்திய எல்லையான லடாக்கில் படைகளை மீளப்பெற்றது சீனா!

பீஜிங், பெப். 12

இந்திய - சீன எல்லையான லடாக்கில் இருந்து இராணுவத்தை திரும்பப் பெறும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது என்று சீனா தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் இரு நாட்டு இராணுவத்தினரும் மோதலில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு மே மாதம் தொடக்கம் பதற்றம் நிலவியது. இதைத் தொடர்ந்து இரு நாட்டு இராணுவத்தினரும் 50ஆயிரம் வீரர்களையும் யுத்த தளபாடங்களையும் குவித்தன.

எனினும், படைகளை திரும்பப் பெற இரு தரப்புகளும் 9 சுற்று பேச்சு நடத்தின. இதைத் தொடர்ந்து கடந்த மாதம் 24ஆம் திகதி படைகளை திரும்பப் பெற இரு நாடுகளும் இணங்கின.

இதற்கமைய நேற்று முன்தினம் தொடக்கம் சீனா, தனது படைகளை திரும்பப் பெறத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும் இது குறித்து, இந்திய இராணுவ தரப்பு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடும் குளிருக்கு மத்தியில் பாரிஸில் தீ அனர்த்தம்

### இருவர் பலி! பலர் காயம்!!



பாரிஸ், பெப். 12

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் மாடிக் குடியிருப்பு ஒன்றில் நேற்று விடிகாலை ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் சிக்கி குறைந்தது இருவர் உயிரிழந்தனர்.

ஆறு மாடிகள் கொண்ட குடியிருப்பின் ஐந்தாவது தளத்தில் அதிகாலை நான்கு மணி அளவில் தீ பரவியது. பெரும் எண்ணிக்கையான தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பலத்த எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட நால்வரில் இருவர் உயிரிழந்தனர் என்றும் ஏனைய இருவரும் ஆபத்தான கட்டத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனவும் முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

தீ பரவியமைக்கான காரணம் தெரியவரவில்லை. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## ரூ. 6000 கோடி மெய்நிகர் பணத்தை திருடியது கொரியா

### ஐ.நா. சபை குற்றச்சாட்டு

நியூயோர்க், பெப். 12

அணு ஆயுத ஏவுகணை திட்டங்களுக்காக வட கொரியா சைபர் க்ரைம் தாக்குதல் மூலம் 30 கோடி டொலர் மதிப்புள்ள “கிரிப்டோ கரன்சி“ (மெய்நிகர் பணம்)களை திருடியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மெய்நிகர் பணம் என்பது பெரிய பணக்காரர்களும் முதலீட்டாளர்களும் சர்வதேச அளவில் இதை தற்போது உலக பொதுச் செலாவணியாக பயன்படுத்துகிறார்கள். இதன் மதிப்பை சர்வதேச சந்தை நிர்ணயிக்கிறது. இதற்கு பல நாடுகள் தடை விதித்துள்ளன.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில், “தடை செய்யப்பட்ட அணு ஆயுத ஏவுகணை திட்டங்களுக்காக வட கொரியா சைபர் க்ரைம் தாக்குதல் மூலம் 300 கோடி டொலர் - சுமார் ஆறாயிரம் கோடி இலங்கை ரூபா மதிப்பு மிக்க எண்ணிம நாணயங்களை வடகொரியா திருடியுள்ளது.

2019 முதல் நவம்பர் 2020 வரை வடகொரியா திருடிய சொத்துக்களின் மதிப்பு 31.64 கோடி டொலர் ஆகும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டமையால் கடந்த 2017ஆம்ஆண்டு அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## இளவரசர் சார்ள்ஸ் தடுப்பூசி பெற்றார்

லண்டன், பெப். 12

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமிலாவும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

அந்நாட்டில் புதிய வகை கொரோனா வைரஸும் வேகமாகப் பரவி வருகின்றது. இதே சமயத்தில் தடுப்பூசி செலுத்தும் பணிகளும் தீவிரமடைந்துள்ளன. இது வரை, ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன என்று புள்ளி விவர தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதற்கட்டமாக முன்கள பணியாளர்களுக்கும், 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. இந்தவகையில் 94 வயதான இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத்துக்கும், 99 வயதான அவரது கணவர் பிலிப்புக்கும் கடந்த மாதம் கொரோனா தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நிலையில் ராணி 2ஆம் எலிசபெத்தின் மூத்த மகனும் இளவரசருமான சார்ள்ஸுக்கு (வயது 72) நேற்று முன்தினம் கொரோனா தடுப்பூசி போடப்பட்டது. 73 வயதான அவரது மனைவி கமிலாவும் தடுப்பூசி போட்டுக்கொண்டார். (ஐ)

## சவுதியின் பெண் செயற்பாட்டாளர் லூஜின் அல் ஹத்லால் விடுதலை!



ரியாத், பெப். 12

சவுதி அரேபியாவின் முக்கிய சமூக செயற்பாட்டாளரான லூஜின் அல் ஹத்லால் 3 ஆண்டு சிறைத் தண்டனைக்கு பிறகு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

லூஜின் அல் ஹத்லால், சவுதியில் பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கும், பல்வேறு விழிப்புணர்வுகளுக்குமாக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். இவர், கடந்த 2018 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் லூஜின் கைது செய்யப்பட்டார். லூஜினுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக்கு எதிராக சர்வதேச அளவில் குரல்கள் வலுவாக எழுந்தன.

இந்த நிலையில் மூன்று ஆண்டுகள் சிறையின் பின்னர் லூஜின் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

இதனை அவரது சகோதரி லினா அல் ஹத்லால் தனது ருவிட்டர் பக்கத்தில், லூஜின் வீட்டில் இருக்கிறார்” என்று பதிவிட்டுள்ளார். அவரது விடுதலை குறித்து சவுதி அதிகாரிகள் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

சவுதி அரேபியாவில் பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. முகம், உடல் தெரியாத அளவுக்கு ஆடைகள் அணிதல், கார் ஓட்டத் தடை, விளையாட்டுப் போட்டிகளை நேரடியாகப் பார்க்கத் தடை, சினிமா பார்க்கத் தடை உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் பெண்களுக்கு இருந்தன.

ஆனால், சவுதி அரேபியின் இளவரசர் வந்த முஹமது பின் சல்மான் ஆட்சிக்குப் பின் பல்வேறு புதிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவர் சமீபத்தில் பெண்கள் கார் ஓட்டுவதற்கும், ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ளவும் அனுமதி அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



### இந்தியா - இங்கிலாந்து தொடர்:

# “டெண்டுல்கர் - குக் கிண்ணம் என பெயரிடுக”

லண்டன், பெப். 12

இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு டெண்டுல்கர் - குக் கிண்ணம் என்று பெயரிட வேண்டும் என்று இங்கிலாந்து முன்னாள் வீரர் மொன்டி பனேசர் கோரியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இந்நிலையில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட விடயங்கள் வருமாறு:

“இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடர், டெண்டுல்கர் - குக் கோப்பை என அழைக்கப்பட வேண்டும். இருவரும் அவரவர் நாடுகளுக்காக அதிக டெஸ்ட் ஓட்டங்களை எடுத்துள்ளார்கள். ஒருவருக்கொருவர் எதிர்த்து பல டெஸ்ட்களில் விளையாடியுள்ளார்கள். டெண்டுல்கர் போன்ற மகத்தான வீரரின் பெயரில் எந்தவொரு கிண்ணமும் இல்லை.

“இரு நாடுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் விளையாடப்படும்போது, பட்டோடி கிண்ணம் என்றும் இந்தியாவில் விளையாடப்படும் போது அந்தோனி டி மெல்லோ கிண்ணம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரை பொத்தம் - கபில் கிண்ணம் என்றும் அழைக்கலாம். ஆனால், இந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை இம்ரான் - கபில் கிண்ணம் என்றுதான் அழைக்கப்பட வேண்டும்”, என்றும் பனேசர் கூறியுள்ளார்.

### அவுஸ்திரேலிய ஓப்பன்:

# நடப்பு சம்பியன் கெனின் ‘அவுட்’!



மெல்பர்ன், பெப். 12

அவுஸ்திரேலிய ஓப்பனின் நடப்பு சம்பிய னான சோபியா கெனின் தோல்வியை தழுவி வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அவுஸ்தி ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்ன் நகரில் நடக்கிறது.

இதில், உலகின் நான்காம் நிலை வீராங் கனையும், நடப்பு சம்பியனுமான சோபியா கெனின் (அமெரிக்கா) இரண்டாவது சுற்றில தோல்வியடைந்தார்.

நேற்று நடந்த போட்டியில் அவர் எஸ்தோனியா நாட்டை சேர்ந்த கனேபியிடம், 3-6, 2-6 என்ற செற் கணக்கில் தோற்று வெளியேறினார்.

இதேவேளை, உலகின் முதல்நிலை வீராங் கனையான ஆஸ்லே பார்டி (அவுஸ்திரேலியா) 2ஆவது சுற்றில் சக நாட்டை சேர்ந்த கவ்ரிலோ வாவை எதிர்கொண்டார். இதில், ஆஸ்லே பார்டி 6-1, 7-6 (9-7) என்ற நேர் செற் கணக்கில் வென்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றோர் ஆட்டத்தில் 6ஆவது வரிசையில் உள்ள கரோலினா பிரிஸ்கோவா (செக் குடியரசு) 7-5, 6-2 என்ற கணக்கில் அமெரிக்காவின் டேனிலி கோலின்சை வீழ்த்தினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஆந்த்ரே ரூப்லே (ரஷ்யா) 6-4, 6-4, 7-6, (10-8) என்ற செற் கணக்கில் பிரேசிலை சேர்ந்த டியா கோவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# பெங்களூரின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக சஞ்சய்



பெங்களூர்,பெப். 12

ஐ.பி.எல் அணியான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக இந்திய முன்னாள் வீரர் சஞ்சய் பாங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே, அந்த அணியின் பயிற்சி குழுவில் அங்கம் வகிக்கும் மைக் ஹசன் (அணி இயக்குநர்), சைமன் கேடிச் (தலைமை பயிற்றுவிப்பாளர்), ஸ்ரீராம் (துடுப்பாட்டம் மற்றும் சுழற்பந்துவீச்சு பயிற்சியாளர்), அடம் கிரிப்பித் (பந்து வீச்சு பயிற்றுவிப்பாளர்), ஷங்கர் பாசு (உடற்தகுதி பயிற்றுவிப்பாளர்) ஆகியோருடன் இணைந்து பணியாற்றுவார்.

5 ஆண்டுகள் இந்திய அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக செயல்பட்டிருந்த 48 வயதான சஞ்சய் பாங்கர், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷுடனான டெஸ்ட் மேற்கிந்திய தீவுகள் தடுமாற்றம்



டாக்கா, பெப். 12

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் ஆட்டம் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 223 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் 2 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில், முதல் போட்டியில் 3 விக்கெட்களால் வென்று மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று டாக்காவில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

அந்த அணிக்கு அணித் தலைவர் பிராத்வைற் - ஜோன் கேம்பெல் இணை தொடக்கம் கொடுத் தது. கேம்ப்பெல் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார்.

அடுத்து வந்த மொஸ்லே 7 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்ப, களமிறங்கிய பொன்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும், மறுமுனையில் நின்ற பிராத்வைற் 47 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

பின்னர் வந்த, கெயல் மேயர்ஸ் 5, பிளக்வூட் 28 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் அந்த அணி 5 விக கெட்கள் இழப்புக்கு 223 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பொன்னர் 74 ஓட்டங்களுடனும், டா சில்வா 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் அபு ஜயீட், தஜுல் இஸ்லாம் தலா 2 விக்கெட்களையும் சௌம்ய சர்கார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



### இலங்கை வீரர்களுக்கு பி.சி.ஆர்!

# முடிவுகளைப் பொறுத்தே மே.இ.தீவுடனான தொடர்

கொழும்பு, பெப். 12

இலங்கை கிரிக்கெட் அணியின் 35 வீரர்கள், ஆதரவு ஊழியர்கள் மற்றும் தேசிய கிரிக்கெட் அணியுடன் தொடர்புடையவர்கள் உட்பட சுமார் 70 நபர்களிடம் நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப் பட்டன.

இந்த முடிவுகள் வெளியான பின்னரே இலங்கை அணியின் மேற்கிந்தியத் தீவுகளுக்கான பயணம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர், இரண்டு டெஸ்ட், மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபது -20 சர்வதேச போட்டிகளை உள்ளடக்கிய மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தை ஒத்திவைப்பதாக இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் ஆரம்பத்தில் கூறியிருந்தது.

எவ்வாறாயினும் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் நிர்வாகம் இந்த கிரிக்கெட் தொடரை முன்னெடுக்க வேறு மாற்று வழிகளை கையாளுமாறு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திடம் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்புக் கூற தவறினால்

# சர்வதேச நீதிமன்றம் செல்ல நான் தயார்

## பேராயர் மல்கம் ரஞ்சித் அறிவிப்பு



கொழும்பு,பெப்.12

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக இந்நாட்டு சட்டம் உரிய முறையில் செயல்படுத்தப்பட வில்லை என்றால் சர்வதேச நீதிமன்றத்துக்கு செல்ல நான் தயாராகவே உள்ளேன் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரி வித்துள்ளார்.**

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கையின் பிரதியை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால், அது இன்னும் கிடைக்கவில்லை.

நாம் சில விஷயங்களில் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். எனவே இதற்காக நாங்கள் காத்திருக்க முடியாது. விரைவில் ஒரு நகலை எங்களுக்கு அனுப்புங்கள். பின்னர் அந்தப் பிரச்னைக்கு நாம் தீர்வுகளைக் காணலாம். நான் ஈஸ்டர் தாக்குதல் ஆணையத்தின் முன் சாட்சியமளித்தேன். அந்த நேரத்தில் நானும் ஆணையத்திடம் கோரிக்கை வைத்தேன். தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதவர்கள் மட்டுமல்லாமல், இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறியவும். எனவே, அந்தக் கோரிக்கைக்கு ஆணையம் சாதகமாகப் பதிலளிக்கும் என்று நம்புகிறேன்- என்றார். (எ)



நீரிழிவு நோய் தொடர்பில் 10 வைத்திய நிபுணர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கிய புத்தகங்கள் அண்மையில் யாழ். நீரிழிவுக் கழகத்தினரால் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் ரி.சத்தியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டன.

# 423 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, பெப். 12

கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 423 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 9 விமான சேவைகள் மூலம் இவர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். இவர்களில் சவூதி அரேபியாவிலிருந்து 75 பேரும், கட்டாரிலிருந்து 45 பேரும் வருகை தந்துள்ளனர்.

# அரச மரத்தில் புத்தர் என்றால் குருந்தூர்மலையில் சிவன்தான்

## சபையில் கருணாகரம் எடுத்துரைப்பு

கொழும்பு,பெப்.12

அரச மரத்தில் புத்தர் என்றால் குருந்தூர் மலையில் சிவனே இருக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதியால் தொல்பொருள் ஆராய்ச்சிக்கென செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த செயலணியால் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் அகழ்வாராய்ச்சி நடக்கும்போது சிவலிங்கத்தை ஒத்த சிதைவுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சிவலிங்கம் போன்ற வடிவுடைய சிதைவுகள் தாரா லிங்கம் என்று சிவபெருமானுடைய மறுவுறுவத்திற்குரிய சிதைவுகள் ஆகும்.

குருந்தமரம் இருந்த அந்த குருந்த மலையிலே சிவபெருமானின் ஆலயம்தான் கிடைக்கும் ஏனென்றால், குருந்தமரம் சிவபெருமானுக்கு மிகவும் வேண்டியதொரு மரம்.



அரச மரம் எந்தளவுக்கு புத்த பெருமானுடன் தொடர்புபட்டதோ, எங்கெங்கெல்லாம் அரச மரம் இருக்கிறதோ அங்கங்கெல்லாம் நீங்கள் புத்தர் சிலையை வைக்கின்றீர்கள்.

அதேபோன்று குருந்தமரம் சிவபெருமானுக்கு மிகவும் வேண்டியதொரு மரம். குருந்த மர நிழலில் இருந்துதான் சிவபெருமான் மாணிக்கவாசகரை ஆட்கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

அதேபோன்று வெடுக்குநாறி மலை, பங்குடாவெளி, கன்னியா போன்ற இந்துக்களுக்குச் சொந்தமான இடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் அபகரிக்கப்படுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது- என்றார். (எ)

## முதல் மாத முதல்வர் ஊதியத்தை வழங்கிய மணிவண்ணன்!

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத் துபிக்கு தனது முதல் மாத மாநகர முதல்வர் ஊதியத்தை வழங்கியுள்ளார் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன்.

தூபி அமைக்க நிதி திரட்ட யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட வங்கிக் கணக்குக்கு பணத்தை வைப்பிலிட்டுள்ளார். முதல்வர் மாத ஊதியம், மேலதிக கொடுப்பனவாக 36,000 ரூபாவை மணிவண்ணன் பெறுகிறார். மாநகரசபைக்குள் உள்ள ஆலயத் திருவிழா நிதியாக அனைத்து உறுப்பினர்களின் கொடுப்பனவிலும் ஒரு தொகை பணம் வெட்டப்பட்டது. வெட்டப்பட்ட பணம் போக, 35,462 ரூபாவை முள்ளிவாய்க்கால் புனரமைப்பு நிதிக்காக அவர் வைப்பிலிட்டுள்ளார்.

மாநகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து தனது ஊதியத்தை பொது சேவைக்காக அவர் வழங்கி வருவார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எமது மக்களின் இலக்குகளை அடைய இன்னும் பல இணைப்புக்கள் அவசியம்

## அருட்தந்தை லியோ ஆம்ஸ் ஸ்ரோங் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,பெப்.12

மக்களின் பேரெழுச்சியை சில்லறை விடயங்களுக்காக பிரித்துவிடக்கூடாது எனத் தெரிவித்த அருட்தந்தை லியோ ஆம்ஸ் ஸ்ரோங், மக்களின் இலக்குகளை அடைய இன்னும் பல இணைப்புக்கள், பல தூரம் பயணம் செய்ய வேண்டும். அவ்வாறான இணைப்புக்களை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

மக்களின் பேரெழுச்சி தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பல ஆண்டுகளாக பல்வேறு விதமான பிளவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். வடக்கு - கிழக்கு, சமயம், சாதி என பல பிரிவுகளாகவும், கட்சிகளுக்கிடையில் பல மோசமான பிளவுகளாகவும் இருந்து வந்துள்ளோம். இவற்றையெல்லாம் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்று பலருக்கும் எண்ணம் இருந்தது. ஆனால் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணியானது ஒற்றமையை, ஒன்றுகூடலை, புரிந்துணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த எழுச்சிக்கு பல விதமான காரணங்கள் இருக்கின்றன. பல கட்ட போராட்டங்கள், பல கட்ட கூட்டங்கள், அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைப்புக்கள், பல்வேறு முயற்சிகளின் விளைவாக இந்த பேரெழுச்சி ஏற்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டுக்குப்பின் தோற்றுப்போனோம் என்ற மனப்பாங்குதான் எல்லோர் மனங்களிலும் ஆழமாக இருந்தது. இதில் இருந்து நாங்கள் ஓர் எழுச்சியை ஏற்படுத்த முடியுமா? என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் அற்றுப்போயிருந்தது. எனினும் இந்தப் போராட்டத்தின் பின் அந்த எழுச்சி ஒன்று மேலோங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகள் கூறவேண்டும்.

ஆகவே இந்தப்போராட்டம், எழுச்சியின் எல்லையை அடைந்துள்ளது. இன்னும் நாங்கள் இந்த எழுச்சிக்குப் பின்னால் பல்வேறு காரணங்களுக்காக இணையவேண்டியிருக்கின்றது. இன்னும் பல இணைப்புக்களுக்காக பேச வேண்டியிருக்கின்றது என்பதை இப்போராட்டத்தின் பின்னர் கண்டுள்ளோம். இப்போராட்டத்தின் பின்னர் எங்கிருந்து எந்த இடத்தை நோக்கி பயணிக்கப்போகின்றோம் என்பதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்தப் போராட்டத்தை யாரும் தமது போராட்டமாக மாற்றிவிடக்கூடாது என்பதுதான் எமது விருப்பம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இது ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் போராட்டம். இதில் முஸ்லிம்களும் இணைந்திருந்தார்கள். அவர்களுக்கான போராட்டம் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் இணைந்திருந்தார்கள். இதை யாரும் ஒருவருடைய போராட்டமாக பார்க்கமுடியாது. அதேவேளை சில்லறை விடையங்களுக்காக இந்தப் பேராட்டத்தின் தன்மைகள் பிரிந்துவிடக்கூடாது என்பதையும் நாங்கள் கூறவிரும்புகின்றோம்- என்றார்.

(எ)

# அடுத்தவாரம் முதல் மன்னாரில் தடுப்பூசி போடும் நடவடிக்கை!



மன்னார், பெப். 12

**மன்னார் மாவட்டத்தில் அடுத்த வாரம் முதல் கொரோனா தடுப்பூசி போடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.விநோதன் தெரிவித்தார்.**

அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை மாவட்டத்தில் எவ்வாறு வெற்றிகரமாக செயல்படுத்துவது என்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூட்டத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மருத்துவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்கத்தின் நடைமுறையின் கீழ் எதிர்வரும் வாரம் முதல் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது. இதில் 30 மற்றும் 60 வயதிற்கு இடைப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட பொது மக்களுக்கும் அடுத்த வாரமே கொரோனா தடுப்பூசி வழங்குவது தொடர்பான பொறிமுறைகள் ஆராயப்பட்டன.

இதேநேரம் இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயல்பாடுகளையும் தொடர்ச்சியாக ஆரம்பிக்கவேண்டும்.

மேலும், மன்னாரில் நேற்று முன்தினம் 10 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 5 பேர் தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றுகின்றனர். மேலும் ஒருவர் ஒருவர் பாடசாலை ஆசிரியர் மேலும் 3 பேர் பிரதேச செயலகம் ஒன்றில் கடமையாற்றுகின்றனர். ஒருவர் ஏற்கனவே கொரோனா தொற்றாளராக இருந்தவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 217 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2021 ஆண்டு மொத்தமாக 200 பேர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டனர். அத்துடன், பெப்ரவரி மாதம் மொத்தமாக 35 பேர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ)



கரவெட்டி பனை - தென்னை சங்கத்திற்கு

# பனை வெல்லம் உற்பத்தி பொறிதொகுதி கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

கரவெட்டி பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு 62 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன பனை வெல்ல பொறித்தொகுதி நேற்று வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - காரைநகர் பனை அபிவிருத்தி சபை உற்பத்தி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போதே இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராயவால் இந்தப் பொறித் தொகுதி கையளிக்கப்பட்டது.

இந்த பனை வெல்லத் தொகுதியால் யாழ். மாவட்டத்தில் மாதமொன்றிற்கு 3ஆயிரம் கிலோகிராம் பனை வெல்லத்தை உற்பத்தி செய்யமுடியும் என பனை அபிருத்தி சபையின் தலைவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட பனை - தென்னை வள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் உற்பத்தி தொழிலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (3)

# வடமராட்சி ஆலயங்களில் களவு சம்பவங்கள் அதிகரிப்பு

**நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை**

வடமராட்சி, பெப். 12

வடமராட்சியில் தொடர்ச்சியாக இரு நாட்களில் இரண்டு கோயில்களின் உண்டியல்கள் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் களவாடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி வாகையடி காளி கோயில் உண்டியல் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் புதன் கிழமை நவிண்டில் சந்தையருகில் உள்ள வீரபத்திரர் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் நவிண்டில் பகுதியில் சிவகாமி அம்மன் கோயில் உண்டியல் உடைக்கப்பட்டமையும்,

அதே சமயம் உடுப்பிட்டியிலும் இதே பிரதேசத்தில் பிறிதொரு கோயிலில் உண்டியல் உடைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியில் தற்போது அதிகரித்துவரும் இந்த ஆலய உண்டியல் திருட்டுக்கள் பெரும்பாலும் சிறிய ஆலயங்களை - சி.சி.ரி.வி. கமெரா பொருத்தப்படாத கோவில்களை இலக்கு வைத்து நடைபெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அத்துடன் இது விடயத்தில் பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறைச்சாலைகளில் மீண்டும் எஸ். ரி. எவ்வின் பாதுகாப்பு

கொழும்பு, பெப். 12

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சிறைச்சாலை கடமைகளிலிருந்து அகற்றப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படை(எஸ்.ரி.எவ்) அதிகாரிகள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஆரம்ப கட்டமாக பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஒரு சில சிறைகளில் மட்டுமே பணியில் இருப்பர் என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலைப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க இது குறித்துக் கூறுகையில், கொழும்பிலுள்ள வெலிக்கடை சிறைச்சாலை, கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை மற்றும் மகசின் சிறைச்சாலை ஆகியவற்றில் பொலிஸ் விசேட அதிரடிப்படை நிறுவப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# வல்வெட்டியில் நாளை இரத்ததானம்!

வடமராட்சி, பெப். 12

நெல்லியடி மத்திய கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரியின் 2017 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள் நாளை சனிக்கிழமை இரத்ததான முகாம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை இந்த இரத்ததான முகாம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பருத்தித்துறை மத்தியஸ்த சபை அமர்வு நாளை

வடமராட்சி, பெப். 12

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை மத்திய சபை நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கட்டடத்தில் நடைபெறும் என தவிசாளர் ஜி. வாசுதேவன் அறிவித்துள்ளார்.

மேலும், இனிவரும் காலத்தில் மாதத்தில் ஆறு தினங்கள் சேவையாற்றுமாறு நீதி அமைச்சு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது. மாதத்தில் இரண்டாம், நான்காம் கிழமைகளில் சபை இயங்கும். மொத்தமாக மாதத்தில் ஆறுதினங்கள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியஸ்த சபைகளில் முறைப்பாடுகள் அதிகளவில் தேங்கியுள்ளமையால் இந்நடைமுறையை நீதி அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. (ஐ-2)

# மனநலம் பாதித்த பெண்களை பராமரிக்கும் இல்லம் திறப்பு!

கிளிநொச்சி, பெப். 12

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் கிளிநொச்சி விசேடதேவைக்கு உட்பட்டோர் வலையமைப்பால் வெற்றிமனை இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களை பராமரிக்கும் இல்லமாக 2009இற்கு முன் வெற்றிமனை இல்லம் இயங்கியது. இது தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்டு கைவிடப்படும் பெண்கள் அல்லது வீடுகளில் அவர்களை முறையாக பராமரிக்க முடியாதவர்களை பராமரிக்கும் பணியை 2009 இற்கு முன் வெற்றிமனை இல்லம் பொறுப்பேற்று சிறப்பாக பராமரித்து வந்தது.

இந்த நிலையில் தற்போது கிளிநொச்சி விசேட தேவைக்கு உட்பட்டோர் வலையமைப்பால் வெற்றிமனை இல்லம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் மா. ஜெயராசா, முல்லைத்தீவு சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் ம. முத்துக்குமார், கரைச்சி சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் த. பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு இல்லத்தை திறந்து வைத்து ஆரம்பித்து வைத்தனர். (ஐ)

# மத்தியஸ்தர் சபை அமர்வு இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணம் மத்தியஸதர் சபையின் அமர்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ். சன்மார்க்கம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் என்று தவிசாளர் க.ஏணஸ்ட் அறிவித்துள்ளார். இந்த அமர்வுகள் இதுவரை காலமும் நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யானை தாக்கியதில் பெண் படுகாயம்!

மட்டக்களப்பு, பெப். 12

யானை தாக்கி பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மட்டக்களப்பு வெல்லாவெளி திக்கோடையில் நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திக்கோடை புதிய 50 வீட்டுத்திட்ட கிராமத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், திருமேனி தமிழ்மலர் (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே படுகாயமடைந்தவராவார்.

தாயும், மகளும் வெளியில் சென்றுகொண்டிருந்தபோதே துரத்தி வந்த யானை தாயாரை தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த பெண் சிகிச்சைக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# வாகரை பிரதேச சபையையும் இழந்தது த.தே.கூட்டமைப்பு!

மட்டக்களப்பு, பெப். 12

**மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கண்ணப்பன் கணேசன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் 7 உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய தலைவர்கள் தெரிவு இடம்பெற்று வருகிறது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் நேற்று வாகரை பிரதேச சபையில் நடைபெற்ற தவிசாளர் தெரிவு தொடர்பான தேர்தலின் போது இவர் தெரிவு செய்யப்பட்டார்.

18 சபை உறுப்பினர்களை கொண்ட மேற்படி சபையில் 16 உறுப்பினர்களே சமுகமளித்திருந்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு வசமிருந்த இந்த சபையானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வசமானது.

இதன்போது, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேரில் வந்து புதிய தவிசாளருக்கு வாழ்த்து தெரிவித்தார். வாகரை பிரதேசத்தின் கல்வி, வாழ்வாதாரம் மற்றும் மக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்ய சேவையாற்ற வேண்டும் என்றும் மக்களுக்காவே நாம் சேவையாற்ற வந்துள்ளோம், என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

வாகரை பிரதேச சபையில் கடந்த இரண்டரை வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி செலுத்தி வந்தது. இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தோல்வியுற்றது.

இதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநரினால் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாஸாக்கள் அடக்கத்திற்கு பிரதமர் உறுதியளிக்கவில்லை

### அரச கட்சி எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, பெப். 12

கொவிட்-19 நோய்த் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளிக்கவில்லை என்று ஆளும் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்த்தன தெரிவித்தார். கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பது நாட்டின் சுகாதார அதிகாரிகளால் எடுக்கப்பட வேண்டிய ஒரு முடிவு - என்றார்.

## குமாரபுரம் படுகொலை:

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று நினைவுகூரப்பட்டது!



திருகோணமலை, பெப். 12

குமாரபுரத்தில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 24 பேரின் 25ஆவது ஆண்டு நினைவேந்தல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று நினைவுகூரப்பட்டது.

திருகோணமலை - கிளிவெட்டி - குமாரபுரத்தில் கடந்த 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி, 9 பெண்கள், 12 வயதுக்குட்பட்ட 9 சிறுவர்கள் உட்பட 24 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலையை செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் 6 இராணுவத்தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனினும் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கடந்த 2016 ஆம் ஆண்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்தப் படுகொலையின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது. இதன்போது, குமாரபுரத்தின் ஆலயம் ஒன்றில் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் மகக்கள் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு சென்ற இராணுவத்தினர் மக்களுக்கு அச்சுறுத்தலாக செயல்பட்டனர். எனினும், கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன் பின்னர், படுகொலையானோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் கூடி மக்கள் அஞ்சலித்தனர்.

இதேசமயம், பூசை வழிபாடு இடம்பெற்ற ஆலயப் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட இராணுவம் தடை விதித்தது. எனினும், நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்திய போது எந்தத் தடையும் விதிக்கவில்லை. (ஐ)



# சிறுவனின் சடலத்துடன் வவுனியாவில் போராட்டம்

வவுனியா, பெப். 12

வவுனியாவில் மர்மமான முறையில் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த சிறுவனுக்கு நீதி வேண்டும் என்று கோரி சடலத்துடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவ்வி பகுதியில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் குறித்து மேலும் அறிய வருவதாவது:

ஏழு வயது பாடசாலை மாணவன் கடந்த செவ்வாய்க் கிழமை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவர் அன்றைய தினம் வீட்டிலிருந்து தனியார் வகுப்புக்குச் செல்கிறேன் என்று கூறிவிட்டு அயல் வீட்டில் விளையாட சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பாதமையால், சிறுவனை காணவில்லை என்று ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், மறுநாள் காலை அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார். சிறுவனின் புத்தகப்பை கிணற்றிற்கு அண்மையில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, உயிரிழந்த சிறுவனுடன் விளையாடிய அயல்வீட்டுச் சிறுவனிடம் விசாரித்தபோது அவர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரிவித்துள்ளார்.

அவர், முகமூடி அணிந்த ஒருவர் மோட்டார் சைக்களில் வந்து சிறுவனை தூக்கிச் சென்றார் என்றும், விளையாடிக் கொண்டிருந்தபோது தவறி கிணற்றில் விழுந்துவிட்டார் எனவும் அயல் வீட்டு சிறுவன் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, அந்த சிறுவனை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்ற பொலிஸார், அவரை விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, உயிரிழந்த சிறுவனின் இறுதிகிரியைகள் நேற்று அவரின் வீட்டில் இடம்பெற்று, உடல் சமளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலம் சென்ற போது, சிறுவனின் மரணத்துக்கு நீதியை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# மண்முனைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவு ஒத்திவைப்பு!

மட்டக்களப்பு, பெப். 12

மட்டக்களப்பு - மண்முனைப்பற்றுப் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான நேற்றைய கூட்டம் நீதிமன்ற உத்தரவிற்கமைய உள்ளூராட்சி ஆணையாளரால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் இரு தடவைகள் தோல்வியுற்றன. இதைத் தொடர்ந்து சபையின் தவிசாளர் பதவி தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரால் பதில் தவிசாளர் நியமனம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கடந்த மாதம் மண்முனைபற்றுப் பிரதேசசபை உட்பட சில உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் தெரிவு தொடர்பில் புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானியின் அடிப்படையில் நேற்று மண்முனைப்பற்றுப் பிதேச சபைக்கான தவிசாளர் தெரிவுக் கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறவிருந்தது.

இருப்பினும், வர்த்தமானியை எதிர்த்து சபையின் நடப்பு தவிசாளர் மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இதையடுத்து சபையின் தவிசாளர் தெரிவு தொடர்பில் எதிர்வரும் 23 ஆம் திகதி வரையில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கமைய தவிசாளர் தெரிவு 23ஆம் திகதி வழக்கு விசாரணை தீர்ப்புக்கு அமைய முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மீண்டும் டெங்கு ஒழிப்பு திட்டம்

கொழும்பு, பெப். 12

கொரோனா தொற்று நிலைமை காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பொது இடங்களை இலக்கு வைத்து வோல் பெக்கியா பக்றீரியா (றுழடடியஉாயை டியஉவநசயை) அடங்கிய நுளம்புகளைச் சுற்றுச்சூழலுக்கு விடுவிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
*6.00 மணி : பக்திபாடல்*
*6.30 மணி : வணக்கம் டான்*



*6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்*
*வழங்குபவர் : சொல்லருவி லலீசன்*
*6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய பலன்*
*வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்*
*7.05 மணி : உளவியல் கருத்து*
*வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்*
*7.15 மணி : கதைவழி அறமொழி*
*வழங்குபவர் : திரு. கு.ஓ. அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்*
*7.20 மணி : சித்த மருத்துவம்*
*வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்*
*7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை - நேரலை*
*10.30 மணி : தொடர் நாடகம்*
*11.00 மணி : பாரதீ*

**பகல்**
*12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை*
*1.00 மணி : துறைக்கு அப்பால்(மறுஒளிபரப்பு)*
*1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்து காட்சிகள்*
*4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி*



*5.30 மணி : Short Film*
*6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10*

**இரவு**
*7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன் - இந்தவாரம் மாஸ்ரர் பட விஜய் சேதுபதியின் தோற்றத்தில்...*



*8.00 மணி : இரவுச் செய்திகள்*
*9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - இலங்கை முஸ்லிம்கள்*



*10.00 மணி : யாவரும் கேளீர்*

**DAN COMEDY HD**

**காலை**
*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*

**பகல்**
*1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*

**இரவு**
*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

**DAN MUSIC HD**

**காலை**
*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*

**பகல்**
*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஓய்வெடு நிலவே*

**இரவு**
*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

**கல்வி TV CHANNEL-1**

**காலை**
*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*

**பகல்**
*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்*

**இரவு**
*7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்*

**ஸ்ரீ ரிவி**

**காலை**
*5.00 மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*7.00 மணி : இன்றைய சிந்தனை*
*7.05 மணி : இன்றைய நாள்*
*7.20 மணி : சின்மய சிந்தனை*
*7.30 மணி : மங்கள இசை*
*8.00 மணி : அருளுரை*
*8.30 மணி : திருவாசகம்*
*9.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம்*
*10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்*
*10.30 மணி : பஜனை*
*11.00 மணி : பக்திமலர்*

**பகல்**
*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : யாழ்ப்பாணம் அராலி கந்தசுவாமி ஆலய திருவிழா*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*

**இரவு**
*7.00 மணி : செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*
*8.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம்*

**CHANNEL HOLY MARY**

**காலை**
*7.00 மணி : ஆலயப் பாடல்கள்*
*9.00 மணி : ஜெபமாலை*
*10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்*
*10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு*
*11.30 மணி : ஜெபமாலை*

**பகல்**
*12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி*
*1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி*
*2.00 மணி : நற்சிந்தனை*
*3.00 மணி : பாடல்*
*4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்*
*4.30 மணி : திருகோணமலை திருப்பலி*

**Pirai Television**

**காலை**
*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*

**பகல்**
*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஜ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*

**இரவு**
*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.